இசழ்ந்து சம்மதமில்லாமற் பேசினார்கள் என்றார்கள், தக்கன்
க்கேட்டுக் கோபநகை செய்திருந்தான்.

இவ்விதமாகச் சகலரும் நெருங்கியிருக்கின்ற சமயத்திற் பர
வரன் மீது சமர்க்கெழுந்த விஷ்ணுவை வென்ற ததீசி மகாரிஷிய
வர்மனம் பொறாமல் அளவற்ற சீஷர்கள் சூழ யாக சாலையிற் பிரவே
சித்து வருவதனைத் தக்கன் கண்டு நமது ஆணைக்கஞ்சி இவன் வந்தா
னென்று அவர்மீதிருந்த கோபந்தணிந்து வாரும்! வாரும்! என்றுஅவ
ரைத்தம் அருகிலிருந்த ஆசனத்தில் இருக்கச்செய்தவுடன், ரிஷியான
வர் தக்கனைப் பார்த்து என்னை வரவழைத்த காரணமென்ன? இவ்வி
டத்தில் நீ நடத்துங் கிரியையாது? உன் எண்ணம்யாது? என்றுவினவ
தக்கன் சிவன் என்பெண்ணைக்கல்யாணஞ்செய்து என்மனம் வருந்தப்
பெண்தியங்கமறைந்து போனது தெரியுமே? பின்என்னை அறியாமல்
அக்கன்னிகையைக்கூட்டிக்கொண்டுபோய்விட்டான். இவைகளை நான்
பாராட்டாமல் அவர்களைப் பார்த்துவரலா மென்று கயிலைக்குப்
போனேன. அப்போது மரியாதை யில்லாமல் தயைதாக்ஷிணிய மற்
று வாயிற் காக்கும் பூதரால் என்னைத் தடைசெய்வித்தான். அதன்
பின் என்பிதா ஓர்யாகஞ்செய்யத் தொடங்கினார். அதிற் சிவனுக்கு
அவிகொடுக்காமல் நடத்தேன். அப்போது அவ்விடத்தில் வந்திருந்த
நந்தி கோபித்துச் சபித்துப்போனான். அதற்குப் பயந்து தொடங்
கிய யாகத்தை எனது பிதா நிறுத்திவிட்டார். ஆதலாற் சிவனுக்கு
அவியில்லாமல் நானிப்போது இந்தயாகத்தைத் தொடங்கி முடிக்க
நினைத்தேன். விஷ்ணுவாதியர் இதோ வந்திருக்கின்றார்கள். இதுதான்
சங்கதி யென்று சொன்னவுடன் ரிஷிபுங்கவர், பாவம்மேலிடுங்காலமா
யிற்று. இக்கொடியவன் செய்கையும் கர்த்தன் செயலும் ஒத்திருக்கி
ன்றதென யெண்ணி நகைத்தனர். தக்கன் ரிஷியை நோக்கிக் கோபி
த்து நீ சிவனுக்கு அன்பனோ? என்றனன். ரிஷிசொல்வார்:—உருத்தி
ரமூர்த்தியை ஆதியென்றறியாதவனே! ஆதியந்தமில்லாத எமது
கடவுளுக்கு ரூபநாமக்கிரியைகளில்லை. இதனைவேதங்கள் சொல்லும்.
அஞ்ஞான விருளில் மூழ்கிய சீவராசிகள் வினையை நீக்கக் கிருபை
யுற்று முக்குணங்களையும் வகித்து ஆத்துமாக்களுக்குப் பழய உணர்
வை விளக்கிப் பிரமனாதியரைச் சிருஷ்டித்து அவர்களுக் குரியபணி
விடைகளைக் கட்டளையிட்டுச் சங்காரகிருத்தியத்தைத் தாமேவகித்த

...தமென்றால், கணக்கிறந்த சிவராசிகளை உண்டு பண்ணவ
...பிதாவாகிய தமக்கல்லது மற்றவர்களுக்கு அத்தொழில் முடியாது.
...ரை ஐந்தொழில் முதல்வனென்று வேதங்கள் சொல்வது உனக்
...தெரியாதோ? அத்தகைய பரமசிவ கடாக்ஷத்தால் நீ இச்செல்வ
...தைப் பெற்றும் உனக்கு நாசமடையக் காலம் வந்தமையினால் அத
னை மறந்தாய். நீயும்உன் சுற்றத்தாரும் பிழைக்கவேண்டுமானால் பர
மேஸ்வரனுக்கு முதல் அவியைத்தந்து யாகத்தை முடித்துக் கீர்த்தி
யடையக்கடவா யென்று பலவாகச்சொல்லினார். அவைகளைக் கேட்ட
தக்கன், நீ சொல்லிய மேலான பரம், மயானத்தின் எலும்பையும்
சிரங்களையும் சாம்பலையும் அணியுமோ? பிரேதத்தை யேந்தித்திரியு
மோ? வராகத்தின் கோடும் ஆமை ஓடும் தரிக்குமோ? உலகம் அழிய
உயிர்களைச் சங்கரிக்குமோ? புலித்தோல் உடுக்குமோ? யானைத்தோ
லைப் போர்க்குமோ? கொடிய அனல் மான் சூலம் ஏந்திப்பிச்சைக்
கு எங்கும் உழலுமோ? பேயனைப்போல் பேய்கள் சூழச்சுடலையில்
ஆடுமோ? பூதங்களைப் படையாகக் கொண்டு உலவுமோ? காளமா
நாகங்களைப் பூஷணமாகச் சூடுமோ? கருவெண்தலையைச் சிரத்திலே
தாங்குமோ? வேற்றுருக் கொள்ளுமோ? மாட்டின்மீ தேறுமோ?
ஆலத்தை உண்ணுமோ? ஒருத்தியைச் சடையிலும் மற்றொருத்தி
யை இடையிலும் இருத்துமோ? பிள்ளைகளையும் பெறுமோ? தாமத
குணத்தைப் படைக்குமோ? இன்னம் அளவற்ற துர்க்குணங்களைக்
கொண்ட உங்கள் ஈசன் பரமாய் எப்படியிருப்பன்? அவனுக்கு இந்
தச்சிறந்த யாகத்தில் அவிப்பாகந் தரமாட்டேன். இதனை உறுதியா
கக்கொள்ளக் கடவையென அஞ்சாமல் தக்கன் சொல்லியகாலத்து ரி
ஷிசிரேஷ்டர் சீற்றநகை கொண்டுஓ! மூடனே! நீயாதும் அறியாதவனை
ப்போல அயிஸ்வரியக் கர்வத்தினால் மங்கினாய்!

பரமசிவன் சருவசங்காரங்கள் தோறும் மாயன் எலும்புகளையும்
பிரமன் சிரங்களையும் கேசங்களையும் உபவீதமாக அணிவர். அவர்கள்
தேகங்களைச் சூலத்திலேந்தித் தமது நெற்றிவிழித்தீயில் தகித்து
அந்நீற்றைப் பூதியாக அணிவர். மாதவன், பூமியைச் சுருட்டிப்பாதல
த்தில் மறைத்த இரணியாக்ஷன் என்னும் அசுரனை வராகவுருவமெடு
த்துத் தனது கூரிய தந்தங்களினால் பாய்ந்து கொன்று பூமியை முன்
போல் விளங்கச்செய்து அச்செய்கையிற் கர்வித்துத் தானே பரமெ

னமதித்துப் பூமியைத் திரும்பவும் தனது கோட்டினாலே அ— போட்டு உபத்திரவம் விளைத்த காலையிற் பரமேஸ்வரன் அந்தக்கே— களைப் பறித்துத்தமது திருமார்பிற் பிறைபோ லணிந்து கொள்— யினர்.

முன் திருப்பாற்கடல் கடையும்போது, விஷ்ணு, ஆமைரூபமெடுத்து அகந்தைகொண்டுசிரமானது, வானத்தை முட்டவோங்கிப்பாய்ந்ததிற் பூமிதத்தளிக்க நேரிட்டது. அப்போதுசிவபிரான் அந்தஆமையின் ஓட்டைப்பறித்துப் பன்றிக்கொம்புகளுடன் தரித்துக்கொண்டனர். இனிச்சிவபிரான் ஐயமேற்றதைச் சொல்லுகின்றோம்.

ஆதியில் தாருகாவனத்து ரிஷிகள் பரமசிவனிடத்திற் பிரயோசனமில்லையென்றும், யாகங்கள் செய்தலேமோக்ஷம் அடைதற்குக்காரணமென்றும் நினைத்து, அவ்வாறே நடத்திவருகின்ற போது, இவர்கள் செய்கைகளைக் கயிலாசபதியறிந்து விஷ்ணுவை வரநினைந்தனர். விஷ்ணு, அந்நிமிஷத்திற் பரமன் முன்வந்துசேவித்து நிற்கச் சிவபிரான் தமது எண்ணத்தை மாதவற்குக் குறித்துக்காட்டி நீ பஞ்சசத்திகளிலொன்றாகிய உருவைக் கொள்ளென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாறே மாயன் மோகினி யுருவெடுக்கக் கண்டு பரமசிவனும் சிறந்த பிச்சாடன வேடங்கொண்டு இருவரும் தாருகாவனத்தின் ரிஷிகளையும் அவர்கள் பத்தினிகளையும் நிலைகுலைக்கும்படிக்குச் சென்றார்கள். இவ்விருவருடைய வனப்புகளை அவ்வனத்தின் ஸ்திரீ புருஷர்கள் கண்டு காமவெறி தலைக்கேற வுழன்று கடைசியில் ரிஷிகள் இது கயிலாசபதியின் செய்கையென அறிந்து பரமேஸ்வரனைக் கொல்ல வெத்தனித்து அதற்கடுத்த அபிசார வேள்வியைத் தொடங்கினார்கள். அதினின்றும் பார்க்கக்கோரமாகிய புலியொன்று கிளம்பி அவர்கள் ஏவலின் பேரிற் பரமசிவத்தை யெதிர்த்துவர, அவர் அதைப்பற்றியுரித்து அதின் தோலை உடையாகக் கொண்டனர். ரிஷிகள் பொங்கிச் சூலமொன்றை உண்டாக்கி விட்டனர். எமது கர்த்தன் அதைப் பற்றித் தம் கரத்திலேந்தினர். அவர்கள் மான் ஒன்றைச் சிருஷ்டித்தனுப்பினர். அதனைப் பரமன் தமது இடக்கரத்தில் தாங்கினர். பின் அளவற்ற காளமா நாகங்களை அவர்கள் சிருஷ்டித்து அனுப்ப, அவைகளைப் பரமன் தமக்கு ஆபரணங்களாக அணிந்தனர். முனிவர் அள

பூதவெள்ளங்களை யேவினார்கள். அவைகளைப் பசுபதி தமக்குச் ணிகளாகிக் கொண்டனர். தவர்கள் தம் வேள்வியினின்றும் ண் தலையொன்றைச் சிருஷ்டித் தனுப்பினர். அதனைக்காள கண்டர் சிரத்திலணிந்து கொண்டனர். ரிஷிகள் சீறித் தாங்கள் கற்ற தர்வண மந்திரங்கள் அனைத்தையும் ஒருவகைப்பட நிருமித்து எமனையனை நாசஞ்செய்யப் போக்கினார்கள். அதனைச் சிவனார், நமது செவிக்கின்பமாய் இசைபாடி யிருப்பாயெனத் தமதுகரத்திற் கொண்டனர். தவத்தர் கோபித்து முயலகனென்னும் அரக்கனை உண்டு பண்ணி வேள்வித்தீயையுங் கூட்டி யனுப்பினர். லோகநாயகன் தமது திருக்கரத்தினை நீட்டி அவ்வேள் வித்தீயை மழுவாக யேந்தியும் முயலகனைத் தள்ளிப்பாதங்களில் மிதித்தும் நின்றனர். இச்செய்கைகளை ரிஷிகள் அறிந்துபொறுமையினாற்சங்கரா! நீ நாசமடையக்கடவாய்! என்று அளவற்ற சாபங்களை யிட்டனர். அவைகள் பரமனிடத்தில் நெருங்காமற் பறந்தன. அப்பால் ரிஷிகள் சோபமுற்று நீங்காத பாவமும் பழியும் பூண்டு பூமிக்குச் சுமையாய்ப் பிணம்போல்நின்றார்கள். பரமேஸ்வரன் அயர்ந்த ரிஷிகளிடத்தில் அன்பாய் அவர்கள் மயக்கத்தைத்தவிர்க்க, அவர்கள் நல்லுணர்வுபெற்று மனங்குழைந்தவராய்க் கரங்களைக் கூப்பிக் கர்த்தனே! அறிவில்லாமற்செய்த வெங்கள் கொடுமைகளைப் பொறுத்தாட்கொள்ள வேண்டுமென்று பரமன்பாத கமலங்களிற் சேவித்துப் போற்றத் தேவதேவன், நமது பஞ்சாக்ஷரத்தை நீங்கள் ஜெபித்துத் தவத்தைச் செய்வீரெனக் கட்டளையிட்டுப் பின் விஷ்ணுவுக்குச் செலவு கொடுத்தனுப்பித் தமது திருக்கயிலைக்கெழுந்தருளினர்.

பூர்வத்திற் கபாசூரன் என்னு மோரசுரன் பிரமனை நோக்கித் தவஞ்செய்து பெற்ற வர முயற்சியினால் தேவர்களை வாட்டிப்பின் பூலோகத்திலும் வந்து கொடுமைகளை விளைத்தனன். அப்போது மானிடர் காசித்தலத்தையுற்று விஸ்வநாதரிடம் அடைக்கலம் புகுவதானார்கள். அப்போது அக்கடவுள் பிரளயகால ருத்திர வடிவுகொண்டு கிளம்பியானைரூபியான அந்த அவுணனைத் தமதொருபாதத்தினாலுதைத்துக் குப்புறத்தள்ளி அவன் சிரத்தை மற்றொரு பாதத்தினால் மிதித்துக்கொண்டு கூரிய நகத்தினால் அவன் பிடரியைக் கீறித் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டனர். அகந்தையிற் சிறந்த தக்கனே! இனிப்பிரம கபால மேந்தியதனைக் கேட்பாயாக!

ஸ்ரீ கந்தபுராணச் சுருக்கம்

முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணுவையும் பிரமனையும் ம...
வந்து வந்தித்து ஆதியந்தமில்லாத பிரமமாவது யாது? என்று வ...
ணப்பித்துக்கொள்ளப்பிரமன் நான்தான் பிரமம் என்றனன். பக்க...
லிருந்த திருமால், பிரமனை நோக்கி, உன்னைப்படைத்த நானே ப...
காரணனென்றான். இவ்வாறு இருவருக்குங் கலகம் நேர்ந்தபோ...
வேதங்களும் குடிலையும் வெவ்வேறு உருக்களைத் தாங்கிவந்து அவர்
களுக்குச் சிவமேபரமெனச் சொல்லின. அவ்வாக்கியத்தையும் அலட்
சியஞ்செய்து பிரமனும் மாலும் ஒருவரோடொருவர் பெரும்போர்
விளைத்தனர். அப்போது சிவபெருமான் அவ்விருவருக்கும் மத்தியிற்
சோதிவடிவாய் நின்றனர். அதனைக்கண்ட இருவரும் இது சிவச்செய
லென்றுணரவில்லை. கர்த்தன் அச்சோதிமத்தியில் உமாபரமேஸ்வர
முகூர்த்தமாய்த்தோற்ற, விஷ்ணு தெளிவடைந்து அதைப்போற்றி
நின்றனன். பிரமன் அகந்தைப்பட்டு நிற்கச் சிவபெருமான் வயிரவமூர்
த்தியை யுண்டுபண்ணி அவரைக்கொண்டு பிரமன் நடுச்சிரத்தைக்
கிள்ளிக்கரத்திற் கொள்ளக் கட்டளை யிட்டனர். உடனே பிரமன் அக
ந்தை யொழிந்து தாழ்ந்தனன். இனி எமதையன் வேற்றுருவெடுத்த
காரணத்தைப் பகருகின்றேன்.

முன் ஒருகாலத்தில் தேவராஜன் தான்திரிலோக சக்கிரவர்த்தி
யென்றும் கொடிய தயித்தியரை வென்றேமென்றும் தனக்கு நிகரில்
லையென்றும் மமதையடைந்தவனாய்க் கயிலாசபதியைத் தெரிசிக்க வந்
தனன், எமது கர்த்தன், பாகசாதனன் கர்வத்தைப் போக்கத் திரு
வுள்ளத்திற்கொண்டு பாரிடவேடந் தாங்கி ஆலயமுகப்பில் வந்துநின்ற
னர். மகபதி அவரைப்பார்த்து தாஷ்டிகமாக நிற்கின்ற நீ யார்? கர்த்
தன் சமயமென்ன? சொல்லென்றான். அதற்குப் பரமன் மாற்றுரை
யாடாமல் உக்கிரமாய்ப் பார்த்து நிற்க, மகபதி அதிகக் கோபங்கொ
ண்டு தனது வச்சிராயுதத்தை அவர்பேரில் வீசியெறிந்தனன். அப்
படை பரமன்பேரிற் பட்டுத் தூளாய் வீழ்ந்தது. பின்பு, கர்த்தன்
அந்த வடிவை மாற்றிக்கணத் தரசாகித்திரிபுராதிகளை யெரித்த நகை
தோன்றப் பயங்கர ரூபத்துடன் நின்றனர். அதனை மகவான்கண்டு
பயந்து அடியேன் அபராதத்தினைப் பொறுக்க வேண்டுமென்று
சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து வேண்டிக்கொள்ளத் தயாநிதியாகிய
எமது கடவுள் தமக்கு அப்போது உண்டாயிருந்த சீற்றத்தைச் சமுத்

ததல் வீசி அவ்விடத்திற் கிருபைசெய்து அவனுக்குப் படையும் டையுங் கொடுத்தனுப்பினர்.

இப்பாற் சமுத்திரத்தினிடத்தி லெறியப்பட்ட கோபக்கனலான ஒரு புத்திரனாய் விளையாடி யிருப்பதனைக்கண்ட கடலரசன் காதலித்து அக்குழந்தையைப் போஷித்து வரும் நாளையில் ஒருநாள் அப்பாலன் பசியினால் வீறிட்டழ அவ்வொலியின் அதிர்ச்சியைப் பிரமன் கேட்டு அதிசயமடைந்து சமுத்திரராஜனிடம் வந்தனன். அவ்வரசன் தன் குழந்தையை ஆசீர்வதிக்கும் படிக்குப் பிரமன் மடியில் வைத்தனன். அப்பாலன் தன் கரத்தை நீட்டிப் பிரமனுடைய நான்கு தாடிகளையும் பற்றி வலிக்க, அவ்வுபாதியினால் அவன் வருந்தினவனாய்க் குழந்தையையேய்த்து மெல்லெனத் தன்னை விடுவித்துக்கொண்டு கடற்கிறைவனிடம் அப்பிள்ளையைத் திரும்பக் கொடுத்துப் போதவுணர்வைப் பெருக்கி அறிந்து ஓ! சமுத்திரராஜனே! இந்தச் சிசுவைச் சுலபமாக நினைக்கவேண்டாம். இவன் பரமசிவத்தின் சீற்றவுருவானவன். தேவர் வர முயற்சி இவனுக்குத் தேவையில்லாமல் யாவருக்கும் மேலான அரசை வகிப்பான். சிவனால் அல்லது இவன் மாளான். இவனுக்குச் சலந்தரனென்று பேரிடுவென்று தன்னிருப்பிடஞ் சென்றான். பிற்பாடு சலந்தரன் தேவர்களை வெற்றிகொண்டு விருந்தையென்னும் அசுரகன்னியை மணந்து சலந்திரபுரமென்னும் பட்டணத்திற் கொடுங்கோலரசு செலுத்தி வந்தான். அக்காலத்தில் இந்திராதி தேவர்கள் மகம்மேருவில் தனக்குப் பயந்து ஒளித்திருப்பதாக அறிந்து சலந்தரன் சலங்கொண்டு அவர்கள் மேற்படையெடுத்துவர விஷ்ணு அதை அறிந்து வந்து அவ்வசுரனுடன் போராடித் தோற்றுப் பின் வாங்கினன். தேவர்கள் வேறுகதியில்லையென்று கயிலாசபதியினிடஞ் சென்று முறையிட்டுக் கொண்டார்கள். அப்போது பரமசிவன் ஒரு விருத்தப் பிராமண வடிவங்கொண்டு சலந்தரன் முன்தோன்றி, நீ கயிலாசபதியைச் செயிக்க முடியாது தேவர்களைவிட்டுப்போய் விடென்றனர். அசுரன் என்னது புஜபலங்களைச் சற்றுஇருந்து பாருமென்றனன். அப்போது இவ்விருத்தர் தமது பெருவிரலினால் நிலத்தில் வட்டமாகக் கீற, அது ஒரு சக்கிராயுதமா யிருந்தது. கிழவர் அசுரனை நோக்கி, சலந்தரனே! உனது சாமார்த்தியத்தைப் பார்க்கவேணும், இந்தச் சக்கிரத்தை யெடுத்துச்சிரத்திலே தாங்கமாட்டுவையோ என்றனர். அவன்

நகைத்து விருத்தரே! எனக்கு இதனைத்தாங்குவது அரிதோ! [torn] பாருமென ஹுங்காரித்து அச்சக்கரத்தை வருத்தப்பட்டு எடுத்துத்த[torn] சிரத்தில் வைத்தான். அத்திகிரி உடனே சலந்தரனுடைய உ[torn] இருகூறாகப் பிளந்து தள்ளியது. அவனைப் பின் பற்றிவந்த சே[torn] னையும் பரமேசன் தமது நுதல் விழித்தீயினாலெரித்துத் தேவர்க[torn] கொண்டாடத் தமது இருப்பிடஞ்சென்றனர்.

இப்பால் சலந்தனுடைய மனைவியாகிய விருந்தை யென்பவள் பேரில் ஆதியில் மயல்வைத்திருந்த விஷ்ணு இதுதருணமென்று தவ வேடம் பூண்டு சலந்தரன் அரண்மனை நந்தவனத்தில் இருந்தனன். கன்னிகையானவள் தன்கணவன் பிரிவாற்றாமையினால் மனம்நொந்து பூஞ்சோலையினிடத்தில் வர, விஷ்ணு தமது துவாரபாலகரை யேவ அவர்கள் இரண்டு புலிகள் உருவாக அவள் எதிரிற் சீறிப்பாய்ந்தனர். அவள் நடுங்கி ஓடி அங்குள்ள கபடச்சன்னியாசியைக் கண்டு அபயமென நெருங்கினள். அச்சந்நியாசி புலிகளை அதட்டித் துறத்திவிட்டான். அப்போது விருந்தை, பெரியவரை நோக்கிக் கயிலைபோன என் கணவன் பிழைத்திருப்பதும் இறந்ததும் நீர் ஞானதிருஷ்டியினாற் பார்த்துச் சொல்லவேண்டு மென்று பிரார்த்தித்தாள். தவசி தனது துவாரபாலகரைத் தூண்ட அவர்கள் குரங்கு ரூபிகளாய்ப் போய்ப் பிளப்புண்டு கிடந்த சலந்தரன் உடலைக்கொண்டு வந்து விருந்தைமுன் வைத்தார்கள். அதைக்கண்டு அவள்பதைபதைத்துவிழுந்து மரணமூர்ச்சையாகினள். அக்காலத்திற் சந்நியாசி தன் ஆசைதீர அவளை எடுத்துத்தன் மார்பில் அணைத்து அவளுடைய சோபத்தை மாற்றினன். விருந்தை தெளிந்து பெரியவரைப் போற்றித்தன் கணவனை உயிர் உண்டாக்கிப் புருஷப்பிச்சை தரவேண்டு மெனப் பிரார்த்தித்தனள். அந்தத்தவசி நல்லதென்று சலந்தரன் உடலைச்சேர்த்து அதில்தான் பிரவேசித்து எழ, விருந்தை ஓ! பிராணநாயகரே! வந்திரோவென்று நமஸ்கரித்து இருவரும் தம் மாளிகையிற் சேர்ந்து சரசசல்லாபங்களுடன் வெகுகாலம் சுகித்திருக்கும்போது ஒருநாள் முகுந்தன் நித்திரை செய்கையிற் பரமசிவனது கட்டளைப்படிக்கு விஷ்ணுவினது கோலந் தோற்றியதை விருந்தை கண்டு திடுக்கிட்டு நமது பதிவிரதாதன்மைக்குப் பங்கம் வரச்செய்தானென்று கோபித்துக் கற்புடையவளாகையால் விஷ்ணுவை யிவ்வாறு சபிப்பதாயினள். புலியாகவந்தவுன்வாயிற்

...பார் உனக்குவயிரிகளாக அரக்கர் குலத்துதிக்கக்கடவர். நீயும்பூமியில் அரசர் குலத்திலவதரித்து என்னை வஞ்சித்தபடியே உன்பத்தினியை அவ்வசுரர் மாயைசெய்து கொண்டுபோக நீகுரங்கினங்களைச் சேர்த்துக்கொண்டுவனங்கள் முதலியவிடங்களில் அலைந்துழந்து உலகர் இகழ்ந்து பழிகூற இருக்கக்கடவை யென்று சாபமிட்டு எரியில் விழுந்து இறந்தனள். விஷ்ணு அவளிடத்துற்ற இச்சையினால் வருந்தி அவள் இறந்த சுடலைப்புழுதியில் விழுந்து புரண்டு பிரலாபித்திருந்தான். தேவர்கள் பரமசிவத்தினிடம் விண்டுவுக்கு நேர்ந்த துன்பத்தினை விண்ணப்பித்துக் கொண்டார்கள். பரமன் நகைத்து உமையவளை நோக்க, அவள் ஓர் விரையைப் பிரமனிடங் கொடுத்துக் கேசவனெதிரில் நாட்டச் செய்தனள். பிரமன் அவ்விதஞ் செய்தபோது அது துளசியாகமுளைத்து உடனே விருந்தையிலும் ரூபமுள்ள பெண்ணாக நிற்கத் தாமோதரன் அவளைக்கண்டு மோகித்துத் தனக்கு அவளைப் பாரியாகத்தன் சிரத்தில் வைத்துக்கொண்டு வைகுந்தஞ்சேர்ந்து வாழ்ந்திருந்தனன். அது முதல் திருத்துழாய் விஷ்ணுவுக்கு உவப்பாயிற்று. அப்பால் விண்டுவானவர், சலந்தரனைப் பிளந்த சக்கரத்தைப் பெறக்கருதிப் பரமசிவத்தைப் பூசித்து வருகையில் ஒருதினம் சகஸ்கிர நாமார்ச்சனைக்கு ஒரு கமலங் குறைவுபடக்கண்டு தன் கண்மலரை யிடந்து சாத்திப் பூசிக்கக் கர்த்தன் இரங்கிக் கண்ணன் விரும்பியபடி அவனுக்குச் சக்கரத்தையும் கடாக்ஷித்தருளினர். அன்று முதல் விஷ்ணுவுக்கு நேமியான் என்னும் பேர் விளங்கியது.

ஓ! தக்கனே! இனிச் சங்கரன் ரிஷபமேறியதனைச் சொல்லுவோம். சதுர்யுகங்கள் இரண்டாயிரம் சேர்ந்தது ஒருநாள். அது முப்பது கூடியது ஒருமாதம். அது பன்னிரண்டு சேர்ந்தது ஒரு வருஷம். அதுநூறு நிறைந்தாற் பிரமன் தனக்கு நூறு வயதாகிப் பொன்றுவன். அக்காலம் விண்டுவுக்குஒருநாள். இந்த கணக்குப்படிக்கு முற்குறித்தவாறே நூறுவருஷம் சென்றால் அவரும் இறப்பர். அண்டங்கள்இடியும். சத்தசாகரங்களும் பெரும்புறக்கடலும் பிரசண்டவாயு மோதுதலினால் ஓங்கி யெழுந்தெங்கும் மூடிக்கொள்ளும். அக்காலத்திற் பரமசிவன் ஏகனாய்த்தமது அக்கினி விழியினாற் சகலத்தையும் நீறாக்கி விளங்குகின்ற அவ்வீமத்திலே சத்திகண்டு களிக்க ஆனந்த நிருத்தஞ் செய்வார். அச்சமயத்தில் தருமதேவதை இறவாமலிருந்து

ஏற்றின் உருவாகிப் பரமனைப் பிரார்த்தித்துக்கொள்ள அவர் அவ
வாகனமாகக்கொண்டு விளங்குவர். இதனாற் கர்த்தனுக்குக் குறையு
ண்டோ? பேதாய்! இனி விஷம் உண்ட கதையைக் கேட்பாயாக!

ஆதியில் தேவரும் அசுரரும் அகோரயுத்தங்களைச் செய்து இரு
திறத்தவரினும் மிகுதியார் மாண்டு இளைத்த காரணத்தை யோசித்து
இனி ஆயுளைவிருத்தி செய்துகொண்டு நீடித்துச் சண்டைதொடுத்து
ஜெயாபஜெயத்தை அறியவேண்டுமெனநிச்சயித்து அதற்கு விஷ்ணு
வின் சகாயத்தைக்கொண்டு திருப்பாற்கடலில் மந்தரத்தை மத்தாக
நாட்டி வாசுகியை தாம்பாகப்பூட்டித் தேவர்கள் ஒருபுறமும் அசு
ரர்கள் ஒரு புறமுமாக அதைப்பற்றி யிழுத்துக்கடலைக்குமுறக்கடை
யும்போது அவ்வருத்தத்தை வாசுகி சகிக்க மாட்டாமல் தனது ஆயி
ரம்வாய்களினின்றும் விஷத்தைக் கக்கினன். அக்கடுவானது சமஸ்
தத்தையும் சாம்பலாகத் தகித்து வருவதைக்கண்டு விஷ்ணுவானவர்
அவ்விஷத்திற்கு நேராக அதட்டிச்செல்ல, ஆலம்வெகுண்டு தாக்கி
அவருடைய வயிர நிறத்தேகத்தைக் கரியநிறமாக்கிவிட்டது. விஷ்ணு
வாதியர் பயந்தோடிக் கயிலாசபதியினிடம் முறையிட்டுக்கொள்ள,
அவர் தமது பக்கத்திற் காத்திருக்கும் ஆலால சுந்தரனைக்கொண்டு
அவ்விஷத்தைத் திரட்டி வரச்செய்து அதனைத்தமது உள்ளங்கையில்
திவலைப் பிரமாணமாக வேந்திப் புசித்துத் தமது கண்டத்தில் நிறுத்
தினர். அவ்விடத்தில் அது நீலமணியைப் போலப் பிரகாசித்திருந்த
மையாற் பரமனுக்கு க்காளகண்ட மூர்த்தியெனப் பேர் விளங்கியது.
இனிக்கங்கையை யெம்பரமன் தாங்கிய வைபவந்தினைச் சாற்றுவாம்.

முன்னொருகாலத்தில் திருக்கயிலாயப் பூங்காவிற் பரமசிவமும்
உமையம்மையும் வேடிக்கையா யெழுந்தருளி யிருக்கும்போது, பார்வ
தியார் ஒரு திருவிளையாடலைக்கருதி கர்த்தனின் விழிகளைத்தமது திரு
க்கரங்களினால் மறைத்தனள், அக்காலத்திற் சூரியன் சந்திரன் அக்
கினி பிரகாசியாமல் அடங்கின, உலகம் இருளிற்பட்டுத்தடுமாறியது.
இறைவன் அவ்விடரைப்போக்கத்தமது நெற்றிக்கண்ணைத் திறந்தனர்.
அதினால் உலகம் விளங்கியிருந்தது. இதனை லோககாயகியார் கண்டு
பயந்து மூடியகைகளை வாங்கும்போது விரல்களினிடத்துப் பெருகும்
வியர்வை, கங்கைகளாகிப் பெருகி உலகங்களை அழித்து ஓடியது.

ரமனுதியர் அதைக்கண்டு பரமனைப் பிரார்த்திக்க, அவர் அவ்வெள்ளத்தைத் தமது சடைகளில் விளங்கும் ஒரு உரோமத்திற் சுவறச்ப்து அடக்கினர். பிரமனுதியர், கர்த்தனைத்தொழுது இப்பவுத்திரகிய கங்கை எங்கள் உலகங்களிலும் சிறிது பெருகக்கடாக்ஷிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். பரமசிவன் அவ்வாறே சில திவலைகளைப் பிரமன் விஷ்ணு இந்திரன் வேண்டியபடிக்கு அள்ளி அவர்கள் கைகளில் தெளித்தனர். அவர்கள் தங்கள் தங்கள் உலகத்தில் அத்தீர்த்தங்களை விட்டார்கள். உடனே அவைகள் பரமபதத்தில் விரசாநதியென்றும் சத்தியலோகத்தில் மானததீர்த்த மென்றும் இந்திரலோகத்தில் தேவகங்கை யென்றும் ஆருய்ப்பெருகின. இவைகளிற் பிரமலோக கங்கையைப் பகீரதன், சிவனுர் சடையின் மூலமாகப் பூமியிற் கொண்டுவர, அப்பரிசத்தால் இறந்திருந்த சகரர் மோக்ஷத்தில் நித்தியமாயிருக்கப் பெற்ருர்கள். இனிப்பராசத்தியை வாமபாகத்திற் கொண்ட நம்சிவப்பரஞ்சுடரின் செயல்களை அறைவாம்.

முன்னெரு சருவசங்காரம் முடிந்தபின்பு சிவத்தால் உதித்த பிரமன் படைக்க நினைந்து சனகன் சனற்குமாரன் சனந்தனன் சனதனன் என்னும் நான்கு குமாரர்களை நிருமித்தான். அவர்கள் படைப்பின் தொழிலின்றிப் பேரறிவால் யோகியராளுர்கள். பிதாமகன் இக்குறையை விஷ்ணுவினிடம் விண்ணப்பிக்க அவர் பிரமனை அழைத்துக்கொண்டு பரமசிவனைத் தெரிசித்துப் பிரமசிருஷ்டி ஓங்கும்படிக்குப் பிரார்த்தித்துக் கொண்டனர். சிவபிரான் அவர்களிருவரையும் மாய்த்து நீறுசெய்து தமது இடது புயத்தைநோக்க அதிலிருந்து உமையவள் உதித்தனள். அவளிடத்திலிருந்து விஷ்ணு பிரமன் சனகாதியர் உண்டானுர்கள். கர்த்தன் அவர்களைநோக்கி இனிப்பிரமசிருஷ்டி மல்குமென்று அருள்செய்து அனுப்பினர். பின்பு சிவகடாக்ஷத்தாற் பிரபஞ்சாதி சிருஷ்டிக்கிரமங்கள் உண்டாகிப் பரவின. இனிக் கர்த்தன் பிள்ளைகளைப் பெற்றகாரணத்தைத் தெரிவிக்கின்ருேம். ஓ! தக்கனே! நீ கேட்பாயாக!

முன்னெரு காலத்தில் தேவராஜன் இராக்ஷதர்களை யெல்லாம் வாட்டிப் பொன்னுலகத்திற் களித்திருந்தனன். தோற்றுப்போன அசுரராஜன், தன்னை அடைந்து தனக்குற்ற துர்ப்பாக்கியத்தை முறை

யிட்டு அதற்கோர் வகையைக் கோரிநின்றபோது பார்க்கவன்,
அரசனே! உன்குலத்தில் உதித்தகன்னி ஒருத்தியை வசிஷ்டன்
பில் வந்த மகதரிஷியைக் கலக்கச்செய்தால் கஜமுகாசுரன் பிறப்பா
அவனைக்கொண்டு அசுரகுலம் விருத்தியடையுமெனக் கட்டளையிட
னன். அசுரன்களித்து விபுதையென்பவளை இணக்கி மகம் மேருவி
தவஞ்செயதிருக்கும் மகதஷிரியினிடம் அனுப்புவதாயினன். அவள்
புறப்பட்டுப்போய் அந்தரிஷியின் தவநிலைமையைக் கண்டு இவரை
எவ்வாறு நாம் கூடுவோமென்று கவலையடைந்து அந்தத் தவசிக்கு
நேரில் தானுந்தவஞ் செய்திருந்தனள். இக்காலத்தில் ஒருசமயம்
ஒருகுஞ்சரம் பிடியைக்கூடிக் களிப்பதை அந்த ரிஷிகண்டு தவமுயற்
சியை மறந்து காமநோய் மிகுதியால் துன்புற்றிருப்பதை விபுதை
அறிந்து இது தான் நமக்கு நல்லசமயமென்று அந்த ரிஷியின் பாத
ங்களில் வந்து பணிந்து நின்றனள். ரிஷி அவள் வடிவைக்கண்டு அதிக
மயல் கொண்டு அவள் சம்மதத்தின் பேரில் அவளைப்பெண் யானை
யாகவரும்படிக்கு வேண்டினர். அவள் அவ்வாறே வந்து காமவிளை
வைக்காட்ட, ரிஷியுங்களிறுக வடிவெடுத்தவளைப் புணர்ந்தனர். அவர்
கள் இருவரும் இன்பமுற்றியவுடன் நாலுகோடிகளும் துதிக்கையும்
விளங்கப் பருவதா கிருதியாகிய திரேகத்துடன் கரங்களில் வாளும்
கேடக முங்கொண்டு கயமுகாசுரன் உதயமானன். அக்கன்னிகையின்
வியர்வையில் அளவற்ற இராக்ஷதர்கள் ஆயுதபாணிகளாகப் பிறந்தா
ர்கள். கயமுகன் துணைவர்களுடன் கூடிக்கொண்டு வடவை பிரசண்
டவாயுவுடன் கலந்தெழுந்தாற் போலச் சஞ்சரிப்பதானன். சுக்கிரபக
வான், கஜமுகனைக்கண்டு ஆசீர்வதித்துப் பரமசிவனைக்குறித்துத் தவ
ஞ்செய்துவர மந்திரோப தேசஞ்செய்தனுப்பினன். அவன் அவ்வா
றுகவே தவஞ்செய்து கயிலாசபதியினிடம் அரிய பெரியவரங்களைப்
பெற்றுத்தனக்கு யாரும் நிகரின்றித்திக்கு விஜயஞ்செய்து தேவர்கள்
முதலியாவரையும்தன் வயப்படுத்திக்கொண்டு பூமியின்கண்வந்து இரா
க்ஷதசிற்பியைக்கொண்டுபொன்னுலகமும்நாணத்தக்கதாகமாதங்கபுர
மென்னும்ஓர்நகரத்தை நிருமித்துஅதிற்பிரவேசித்துச் சபாமண்டபத்
தில்வீற்றிருந்து பிரமன்தினம் பஞ்சாங்கம் சொல்லிப்போகவும் இந்தி
ரதிதேவரும் காமதேனுவும் கற்பகதருக்களும் சங்கநிதி பதுமநிதி
சிந்தாமணியும் அரம்பாஸ்திரீகளும் ஏவல்களைச் செய்து வணங்கக்
கொடுங்கோலரசு செலுத்தி வருங்காலையில் ஒருதினம் தேவேந்திரன்

தலானவர்களை நோக்கி இன்றுமுதல் நீங்கள் நம்முடைய சபைக்
ரும்போ தெல்லாம் சிரத்தில் மூன்றுதரம் குட்டிக்கொண்டு கர
ளை மாறி இருசெவிகளையும் பற்றி மூவிசை இறங்கி யெழக்கடவீ
ணக் கட்டளையிட்டான். அவ்வாறே அவன் ஆணைக்கஞ்சி நித்தி
யமும்கடந்து கொண்டு துயரக்கடலில் அழுந்திவருந்திய தேவேந்திர
னாதியர் இதனைப்பிரமன் விஷ்ணுவினிடம் முறையிட்டுக் கொள்ள,
அவர்கள், அவர்களைத் தேற்றித்திருக்கயிலைக்கு அழைத்துப்போய்
ஆதிகர்த்தனிடந் தங்கள் துன்பங்களைத் தெரியப்படுத்திக் கொண்ட
னர். பரமகிருபாநிதியாகிய சிவபிரான் அவர்களிடத்திற் கருணைகொ
ண்டு நாம் ஒரு பிள்ளையைப்படைத்தனுப்பி உங்கள் இஷ்டப்படிக்குக்
கயமுகனைச் சம்ஹரிப்போமெனத் திருவாய்மலர்ந்தருளி அவர்களு
க்கு விடைகொடுத்தனுப்பித் தாமும் உமையவளும் பூங்காவிலுள்ள
மண்டபத்திற் பிரவேசித்தார்கள். பார்வதியார் அம்மண்டபத்திலுள்ள
சித்திரத்தைப்பரமன் அருளின்படிக்குப் பார்க்க, அதில் முதலெழு
த்தாகிய ஓங்காரமானது குஞ்சரமும் பிடியுமாக உருக்கொண்டு புணர
க்கண்டு தேவியார் பரமசிவத்தைத் தொழுது இது என்னகாரணமெ
ன்று வினவினள். பரமசிவன், பெண்ணே! உனது நோக்கம் பட்ட
காரணத்தினால் பீஜாக்ஷரம் இவ்வுருவைப்பெற்றுப் புல்லியது உனது
பெருமைகள் நாமேயறிவோம் என்ற சமயத்தில் அவ்விரண்டும் இன்
பமுற்றி முன்போலச் சிறந்து குடிலையில் அடங்கின. உடனே நாலு
கோடுகளும் நீண்ட துதிக்கையும் பருத்தவயிறும் குறியதாள்களும்
பெற்று ஒருமைப்படச்சிந்திப்பவர் உணர்வாய்ப் பரிபூரணமாய் எங்
கும் நிறைந்து சகலரும் தொழுது போற்று முயற்சிபெற்றுப் பரமசி
வமே யென விளங்கிப் பிள்ளையார் அவதரித்துச் சிவசத்தியினது
பாதங்களிற் சேவிக்க அம்மையும் அப்பரும் அவனைவாரித்தழுவி
முத்தமிட்டு ஐயனே! யாவராயினும் முந்தி உன்னை நினைந்து ஒருகரு
மத்தைச் செய்வாராயின் அவர்கள் மனோபீஷ்டங்கள் முற்றுப்பெறக்
கடவது. அடியார் விக்கினங்களைப் போக்கியாவருக்கு மேலாக விளங்
கக்கடவாய் என்று வாழ்த்தி, குமாரனே! கயமுகனைச்சங்கரித்து
முகுந்தனாதியரின் இடுக்கண்களைப் போக்கு விப்பாயெனப் பூதப்ப
டைகளை உண்டாக்கித்தந்து விஷ்ணுவாதியர் வந்து தொழ விக்கினகர்
த்தனைத் தமது முதற் கோபுரவாயிலில் வீற்றிருக்கச் செய்தனர்.

இவைநிற்க, ஒருதினம் கேசவன் பரமசிவத்தினிடம் பே
குங்காலையிற் பரமன் பரமேஸ்வரியை நோக்கி நாம் இருவரு
டை ஆடுவோம். அதற்குப்பந்தயம், நீ தோற்பையாயின் உன
பணிகளை யெல்லாம் எனக்குத்தருக. நீ வென்றால் எமது அணிக
கிய சர்ப்பம் பிறையாதியான வைகளைப் பெற்றுக்கொள்க வென்
சொல்லித் தோற்புக் கெலிப்புக்குவிஷ்ணுவைச் சாட்சியாக வைத்துக்
கொண்டு ஆடினர். அப்போதுசிவம்,யாதுகரணத்தாலோ அம்மைக்குத்
தோற்றும், உமையை நோக்கிநகைத்து நீ நமக்குத் தோல்வியுற்றபடி
யால் உனது ஆபரணங்களைத் தருகவெனக் கேட்டனர். அம்மன், கர்
த்தனுடன் வாது தொடுக்க அஞ்சிக்கரியவனைச் செயம் யாருக்கெனச்
சொல்லக் கேட்க, மாயன், பரமசிவனே வென்றாரெனக்குறித்தனன்.
உடனே பராசத்தியார் கோபமடைந்து நீ அழிவழக்குச் சொன்ன
மையாற் பாம்பாகக் கடவதெனச் சபித்தனள். உடனே விஷ்ணு அவ்
வடிவந் தனக்கு நேரக்கண்டு பயந்து பரமசிவனை வேண்ட, அவர் பய
ப்படவேண்டாம் நீ தெற்கேயுள்ள ஒருபாலைவனத்தின் வடவாலவிரு
ட்சத்தின் பொந்தில் தவஞ்செய்திருப்பாயாயின் விநாயகன், கயமுக
னைவென்று அம்மார்கத்தில் வரும்போது இவ்வுருமாறு மென்று
அருளிச்செய்தனர். விஷ்ணு அவ்வாறே தங்கியிருந்தனன். இப்பால்
தேவேந்திராதியர்,விநாயகமூர்த்தியிடம்வந்து சேவித்துக்கயமுகனைவா
ட்டி எங்களை ரெக்ஷிக்கவேண்டும். தினம் அவனைக்காணப்போகும்
போது சிரங்களிற் குட்டி இருசெவியும்பற்றி மும்முறைவணங்கி எழு
ம்படிக்குப் புதியகட்டளையிட்டு இம்சிக்கின்றானென முறையிட்டுக்
கொள்ளக் கணபதி அவர்களுக்கு அபயங்கொடுத்து அசலனென்னும்
பூதன் மீதுஆரோகணித்துச்சகலபூதப்படைகளுடன்கயமுகன் அரசு
செய்திருக்கும் மதங்கபுரத்தை நோக்கிச்சென்று அந்த அசுரனுடன்
கொடியபோராட்டஞ் செய்து கடைசியில் தமது ஒரு கோட்டை
முறித்துச் செலுத்திக் கயமுகனை இருகூறாகப் பிளந்து தள்ளினர்.
அவன் உதிரம்பெருகித் தோய்ந்த இடம் இக்காலத்திலும் செங்கா
டென்னும் பேருடையதா யிருக்கின்றது. பின்பு கயமுகன் சிவவரப்
பிரசாதத்தால் மண்விண் மூடத்தக்க பருத்த வடிவினையும் அக்கி
னியைப்போலச் சிவந்தகண்களையும் பெற்றபெருச்சாளியாகிச் சீறிப்
பாய்ந்து வரும்போது அசலன் தோளில் இருந்த கணபதியானவர்
தாவி அதன் முதுகில் அரோகணித்து நம்மைச் சுமந்து திரிவாயென்

த்தினர். தேவர்கள் ஐயன் புகழைப்பாடிக் கற்பகமலர்களைச் ரிந்தார்கள். விநாயகமூர்த்தி, பிரமன் முதலானோர் சூழ்ந்துபோற அவ்விடம் விட்டுப் புறப்பட்டுவரும் மார்க்கத்தில் தமது பிதாவை தாபித்து ஒருஸ்தலத்திற் பூசித்தனர். அதுகணபதீச் சுரமென்று இக்காலத்தும் விளங்குகின்றது. பின்பு விஷ்ணு பாம்பாய்த்தவஞ் செய்திருக்கின்ற பாலைவன மார்க்கமாக விநாயர் எழுந்தருளினர். விஷ்ணு அவரை எதிர்கொண்டு தொழுதவுடன் தனது சுயவடிவம் பெற்றுப்பின் கணபதியைப் பூசித்துச்சகல வரங்களையும் பெற்றனன். அப்பால் விநாயகமூர்த்தி கயிலைசேர்ந்து தமது பிதாவைச் சேவித்து முன்போல் அங்கு எழுந்தருளி யிருப்பதாயினர். அப்போது தேவர்கள் அக்கடவுள் சந்நிதானத்தில் மும்முறை குட்டிக்கொண்டு செவிகளைப்பற்றிப் பாதங்களிற் சேர்த்துத் தாழ்ந்தெழுந்து கணபதியைப் போற்றிசெய்து, கர்த்தனே! இவ்வாறு உலகத்தார்கள் உம்மைப் பூசித்து நடந்துகொண்டால் அவர்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுத்து இரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தபடிக்கு வரத்தைப்பெற்றுப் பின் தங்கள் பதவிகளிற்சேர்ந்து சுகத்தி லிருந்தார்கள். நற்குணங்களையுடைய யோகிகளாலும் அறிதற்கரிய சிற்குணனைய் சின்மயனாய் நின்மயனாய்ப் பராபரனாய் விளங்கும் பரமசிவத்தின் காரணங்களைச் சொல்லிமுடியுமோ வென்று ததீசி முனிவர் சொல்லி முடித்தவுடன் தக்கன், ஓ! முனியே! பலவாகச் சொல்வதிற் பயனில்லை! கயிலாசவாசியாகிய உனது கடவுள் ஆதியேயாயினும் அவனுக்கு அவிகொடுக்கமாட்டேன்! ஏன்வீண்வார்த்தையாடுகின்றாய்! போ!என்று சொல்ல அந்தரிஷிக்கு அதிகக்கோப முண்டாகிப்பரமசிவத்தை இகழ்ந்து செய்யும் உன்வேள்வி அழிவதோடு உண்மையைப் பேசாமல் மிரளவிழித்துக் கொண்டு இவ்விடத்திலிருக்கின்ற தேவர்களும் மாளக்கடவரென்றும், பின் யாகத்துக்கு வந்திருந்த பிராமணர்களை நோக்கி நீங்கள் இருபிறப்பாளராக வேதவிதிக்குப் பிசகினவராய் உழலக்கடவீர்களென்றும் சாபமிட்டுத் தமது ஆசிரமம் சேர்ந்தனர்.

"தக்கன் வேள்வி தொடங்கல்"

ரிஷி சென்றவுடன் நேரிட்ட துர் நிமித்தங்களையும் தக்கன் யோசியாமல் ஆசிரியனைக்கொண்டு வேதவிதியில் சிவத்தின் பாகமான பிர

தான மந்திரங்களை நீக்கி விஷ்ணுவுக்குரிய வாக்கியங்களை அவைகளு க்குப் பிரதியாக ஓதி மகத்தை வளர்க்கக் கட்டளையிட்டு விஷ்ணுவாதி யரை மந்திர பூர்வமாகக் கூவி அவிசுகளைக் கொள்வீரென உபசரித் தான். அது தேவாமுதத்தினுஞ் சிறந்ததாயினும் பிரதம தேவ நீக்கிய அருவருப்பால் அவரவர்களுக்கு நஞ்சாகக் காட்டியது. அ காலத்தில் தக்கன் செல்வச் செருக்கை நாரதர் அறிந்து கயிலாசபதியி னிடத்தில் அதனைத் தெரிவிக்கப்பக்கத்திலிருந்த உமையவள் கர்த்த னைப் போற்றி, சுவாமி! என்பிதா செய்கிற யாகத்தைப் பார்த்து வர விடை தரவேண்டுமென்று கேட்கப் பரமன், உன்னை எவ்வளவும் நினையாமல் அகந்தை கொண்டு அவன் செய்யும் வேள்விக்கு நீ போக லாகாதென்று சொல்ல, அம்பிகை, தெரியாமையால் அவன் செய்த பிழையினை மன்னிக்க வேண்டுமென்று மன்றாடி வருதி வாங்கிக்கொ ண்டு சகல ஆடம்பரங்களுடன் விமானத்தில் எழுந்தருளித் தக்கன் யாகசாலையிற் பிரவேசித்தபோது அவன் பார்வதியைக் கண்டு அவளைக் கோபித்து அதட்டித் தாய்தந்தையற்ற பித்தனுக்குரிய நீ இந்த யாகத் துக்கு வரவேண்டியதென்ன? இக்காரியத்தைக் குறித்து நான் உனக் குச் சொல்லி யனுப்பினதுண்டோ? நான் வெள்ளிமலைக்கு வந்த கால த்தில் மாமனென்றும் எண்ணாமல் என்னை அவமானம் செய்வித்த வனுடைய தேவியென்று உன்னை அன்றே மறந்து விட்டேன்! இவ் விடத்தில்நில்லாமல் சீக்கிரமாகத்திரும்பிப்போய் வீடென்று சீறிச் சொன்னான். அதைக்கேட்டுப்பராபரையானவள் மனம் வாடித்தந்தை யை நோக்கி நீ செய்யும் வேள்வியைக்கேள்விப்பட்டுப்பேதமில்லாமல் நானே வந்தும் சீறித்தடுக்கின்றாய்! இது நன்மையோ? ஆனால் உன் கருத்தைத்தீர்க்க மாய்ச்சொல்லிவிடு வாயென்ன, உடனே தக்கன் நகைத்து நீயும் பேயனுடன் பேயாகி என்னைமதியாமலிருந்தமையால் உன்னைத்தள்ளி வைத்தேன். இம்மகத்தில் உன் கணவனுக்கு அவிப் பாகங்கொடேன்! போ! போ! வென்று சொன்ன மாத்திரத்தில் அம் பிகைக்குக் கோபம் பிரவேசித்துப்பெரு மூச்சுண்டாகியது. அக்கோ பத்தின்உக்கிரம்உலகத்தைப்படுத்துவைத்த துஇத்தன்மையதென்றுயா வராற்சொல்லப்படும்! பின் உமையவள் கருணையினால் அதனைஅடக்கிக் கொண்டு தக்கனைப் பார்த்து, நீ என்னை இகழ்ந்ததை நான் பொரு ட்டாக நினைக்கவில்லை! என்கர்த்தனைக் குறித்துப் பேசிய கொடிய சொற்கள் என்செவிகளில் விஷத்தை யொப்பப் புகுந்தன! இவ்வபரா

ம் யாவராலே துடைக்கப்படும்! பேதாய்! இனி எவ்விதமாகக் கடத்
தேறுவாய்! உனக்கு இதற்குத்தக்க தண்டம் விரைவில் உண்டாகக்
கடவதென்று உடனே கயிலையை அடைந்து நடந்த விருத்தாந்தங்
ளாத்தமது நாயகனுக்குத் தெரிவித்துத் தக்கனது வேள்வியை
அழிக்கத் திருவுள்ளங் கொள்ளவேண்டுமென வேண்டினள்.

"யாகசங்காரம்"

அப்போது எமது கர்த்தன் கௌரியின் அன்புக்கிரங்கி அவள் எண்ணப்படி முடிக்கத் திருவுளங் கொண்டவுடன் அவர் நுதல்விழியில் ஆயிரம் சிரங்களுடனும் இரண்டாயிரம் கரங்களுடனும் அகோரவீரபத்திரர் உதயமானர். அதேசமயத்தில் உமையவளது கோபக் கனலில் பத்திரகாளி ஆயிரஞ் சிரங்களுடனும் இரண்டாயிரங் கரங்களுடனும் வெளிவந்து வீரபத்திரர் மருங்கில் நின்றாள். இவ்விருவருடைய வந்தனங்களை யேற்ற பரமசிவன் அவர்களை நோக்கி நீங்கள் இருவருந் தக்கன் யாகஞ் செய்யுமிடத்திற்குச் சென்று அவிப்பாகத்தைக் கொடுத்தால் வாங்கிவருவீர். இல்லாவிட்டால் தக்கன் சிரத்தைக்கண்டித்து அவனுக்கு உதவியாய்ச் சூழ்ந்த தேவராதியரை அதப்படுத்தி யாகத்தையும் அழித்து மீளக்கடவீர். அப்போது நாமும் அங்கெழுந்தருளுவோ மெனப் பணித்து உடனே தமது வேர்வையினின்றும் மயிர்க்கால்களி னின்றும் அளவற்ற பூதங்களையும் படைத்தனுப்பினர். உமையவள் அதேபிரகாரம் தாமும் அளவற்ற காளிகளைப் படைத்தனுப்பினள். அவர்கள் ஆர்ப்பரித்து எழும்பித்தக்கன் வேள்விச்சாலைக் காவலரைக்கொன்று தின்று அதனை வளைந்து கொண்டனர்.

பத்திரகாளியுடன் வீரபத்திரக்கடவுள் ஆர்ப்பரித்து யாகசாலையிற் சென்று ஓமகுண்டத்திற் கருகில் வருவதைப் பிரமனுதி தேவர்கள் கண்டு நடுக்குற்றிருக்கும் போது வீரபத்திரதேவர் சிறிச்சங்கநாதஞ்செய்தனர். பூதகாளிக் கூட்டங்கள் சுற்றிக்கொண்டு யாகசாலையை அழிப்பதனைக் கண்ட தக்கன் கோபங்கொண்டு தயிரியத்தை விடாமல் வீரபத்திரரைப் பார்த்து நீயாவன்! இவ்விடம் வந்தகாரணமென்ன வென்று வினவ, வீரன் நகைத்து நான் சங்கரர் குமாரனும். அவர் கட்டளையின் படிக்கு இந்த வேள்வியில் அவிப்பாகம்

வாங்கிப்போக வந்தேன். தாமதஞ் செய்யாமல் தரக்கடவா வெ
கேட்க, சிவனுக்கு இவ்விடத்தில் அவிப்பாகங் கிடைக்கமாட்ட
ன்று தக்கன் மறுத்தான். வீரபத்திரர், தக்கனுக்கு அளவற்ற ம
லைப்போதித்தும் அவன் கேட்கவில்லை. அப்பால் வீரபத்திரர் பக்கத்
திலிருந்த விஷ்ணு பிரமனைக்குறித்து இது உங்களுக்குச் சம்மதமோ
வென்று கேட்டனர். அவர்கள் மௌனமா யிருந்தார்கள். உடனே
வீரபத்திரர் கோபங்கொண்டு தமது கதையைச் சுழற்றிக் கேசவன்
மார்பில் திடீரென மோதி அவனை மூர்ச்சிக்கச் செய்து, பிதாமகன்
சிரங்களிற் குட்டி அவனைக் குப்புறவிழ்த்தி, கலைமகள் மூக்கையும் குய
ங்களையும் அரிந்து, சந்திரனை உதைத்துத் தள்ளித் தேய்த்து, சூரிய
னைப் பல்லுதிர அறைந்து, சனியைக் கண்ணைப்பிடுங்கி, எமனைவெட்டி,
இந்திரனைக் கண்டித்து, அக்கினிதேவன் கரங்களை முறித்து நாக்களைக்
களைந்து, அவன்தேவியின் நாசியை நறுக்கி, நிருதியைத் தண்டினால்
மாய்த்து, வேண்டிக்கொண்ட உருத்திரகணங்களை ஓடிப்போக விழியி
னாற் குறித்து, வருணனை எழுவாயுதத்தால் மாய்த்து, வாயுவைவாளி
னால் வாட்டி, குபேரனைச் சூலத்தினாற் கொன்று, ஈசானமூர்த்தியை
வைது இகழ்ந்து, யாகதேவதையை ஒருபாணத்தினால் அடக்கி, யாக
குருவைக்கண்டித்து, அதிஉக்கிரத்துடன் மேலிட்டுவந்தனர். அதனை
க்கண்ட தக்கன், மிகவும் அச்சமுற்றுப் பின் தேறிக் கொக்கரித்துச்
சண்டைக்கு முன்வந்தனன். வீரபத்திரர் அவன் சிரத்தை வெட்டித்
தள்ளினர். பத்திரகாளியானவள் தக்கன் தேவிமுதலியவர்களைச் சம்
ஹாரஞ்செய்து விட்டனள். மூர்ச்சைதெளிந்த விஷ்ணு கோபித்து
வீரபத்திரருடன் எதிர்த்துச் சண்டையிட்டு முடியாமற் கடைசியிற்
சரணடைந்தான். பிரமனுந் தாழ்ந்து நின்றான். அந்தச்சமயத்திற் சிவ
பிரான் பராசக்தியார் சமேதராக ரிஷபவாகனத்தி லெழுந்தருளிச்
சிவகணங்கள் சூழ யாகசாலைக் கெழுந்தருளக் கண்ட வீரபத்திரர்
அவரைத்தொழுது நின்றார். விஷ்ணு பிரமனாதியரும் பரமனை வந்து
பணிந்து தங்கள் குறைகளைப் பொறுத்தாள வேண்டுமென்று இரந்
தார்கள். உமையவள் இரக்கமுற்றுப் பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து
மடிந்தவர்களை எழுப்பும்படிக்கு விரும்பினள். கயிலாசபதி அதற்குக்
கிருபைசெய்து வீரபத்திரரைக் கொண்டு யாவரையும் பிழைக்கும்படி
செய்ய, அவர்கள் அனைவோரும் எழுந்து பரமசிவனை நெருங்கிப்போ

ின்றனர். தக்கனும் ஆட்டுத்தலையினைப் பெற்றெழுந்து நல்லறி
ர பரமசிவனைப் போற்றி நின்றனன். கர்த்தன் வீரபத்திரரை
அண்டத்தின் எல்லையிலிருந்து சகல புவனங்களையும் பாதுகாக்கவும்
மற்றவர்களை முன்போலத் தத்தம்பதிகளிற் சேர்ந்திருக்கவும் கட்டளை
யிட்டுத்தாம் உமாதேவியாருடன் கயிலைக்கெழுந்தருளினர்.

"தக்கன் நன்மை யடைதல்"

இவ்வாறு சகலரும் நீங்கியசமயத்திற் பிரமன் தனது புத்திரனாகிய தக்கனை நோக்கி உன்னுடைய அகந்தையினால் தவத்திற் பெற்ற செல்வத்தைப் பறிகொடுத்தும் அல்லாமல் உலகம் உள்ள மட்டும் தீராதபழியினையும் வேற்றுருவினையும் பெற்றனை, கண்ணனும் யானும் முன்னொருகாலத்தில் நாம் நாம் பரமென்று அகந்தை கொண்டு அளவற்றகாலம் வாது கொடுத்திருந்த போது உலகங்கள் அழிவடையவும் தேவர்களிற் பலர் இறக்கவும் சிலர் கயிலாயவாயலில் முறையிட்டோடவும் மேகங்கள் கரிந்து உருளவும் இவ்விதங்களாகச் சகலமும் வாதைப்பட்டன. அப்பொழுது சிவகடாக்ஷத்தால் நாரதர் வந்து என்னையும் விஷ்ணுவையும் பார்த்து உங்களுடைய வீண்வாதினால் உலகங்கள் நிலைகுலைகின்றன. இனிச்சண்டையை நிறுத்தக்கடவீர்! என்று சொல்லியும் நாங்கள் கேளாமற் போரைத் தொடுத்திருக்கின்ற போது தேவர்கள் பிரார்த்தனைக் கிரங்கிப் பரமசிவம் எங்கள் மத்தியில் அக்கினிமலையாகத் தோற்றி நாங்கள் ஏவியபடைகளை உண்டு அளவுபடாமல் நின்றனர். அதைக்கண்டு விஷ்ணுவும் நானும் பிரமித்துத் தியங்கி நிற்க, வானத்தினின்று ஒருவாக்கானது ஓ! விவேகமில்லாதவரே! இச்சோதியின் அடிமுடியினைக் கண்டவரே பெரியரென்று எழுந்தது. உடனே விஷ்ணு, வராகமாகப் புவியைக் கிள்ளி அச்சோதிப் பிழம்பின் அடியைக்காணச் சென்று முடியாமற் சோர்ந்து மீண்டார். யானும் அன்னமாய்ப் பறந்து வானத்தில் அதின் முடியைக்காணச் சென்று முடியாமல் வருந்தித் திரும்பி, இளைத்திருக்குந் திருமாலுடன் சேர்ந்து யாவரும் அறிதற் கரிய பரவசிவத்தின்பாதங்களிற் சரணடைந்து எங்கள் அகந்தைகளைப் போக்கிக்கிருதார்த்தரானோம். அப்பால் தோன்றி நின்ற ஜோதிப்பிழம்பில் எங்களுக் கருள்செய்த சிவபிரான் மறைந்தனர், உடனே அந்த அனல்வடி

வம்மாறி ஒருமலையுருக் கொண்டு சகலருங் கண்டு தொழ நின் யாங்கள் சிவக்குறியினைத் தாபித்து அந்த இரவில் வழிப்பட்டு எ பதவிகளிற் சேர்ந்தோம். அத்தினம் சிவராத்திரி யெனச்சொல்லப டும். ஆகையினாலே ஏ! பிள்ளாய்! நீயும் அத்தகைய பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்து பேரின் பத்தினை அடைவாயென்று போதித்தனன். தக்கன், பிதா அருளிச்செய்தபடிக்கு கிகாற்றகாசித்தலத்திற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து ஆயிரம் வருஷந்தவஞ்செய்து பரமசிவத்தின் அனுக்கிரஹத்தினாற் கணத்தலைவனானன்.

"முசுகுந்தன் கந்தவிரதம் அனுஷ்டித்தது."

பாலசுப்பிரமணியக் கடவுள் அனுக்கிரஹத்தினால் இந்திரன் திரிலோக பட்டாபிஷேகம் பெற்றுக் களித்திருக்கும் போது முசுகுந்தச்சக்கிரவர்த்தியானவன் பாலசுப்பிரமணிய தேவருக்குரிய சிறந்த விரதங்களைத் தான் மிகுந்த பக்தி வைராக்கியங்களுடன் அனுஷ்டித்து வருவதோடும் தன் அரசாட்சிக்கு உட்பட்ட நாடுநகரங்களில் வாசமாயிருக்கின்ற சகலரையும் அவ்விரதங்களைக் கைக்கொண்டு நடக்கக்கட்டளையிட்டுச் செங்கோல்செலுத்தி வந்தனன். ஒருசமயத்தில் அவன் வசிஷ்டர் ஆசிரமத்துக்குச் சென்று அவரை பழிபட்டுக் கந்தசுவாமியாருக்குரிய விரத மான்மியங்களனைத்தையும் முறைப்படி போதிக்க வேண்டிக் கொள்ள ரிஷீஸ்வரர் மகிழ்ந்து, அந்த முருகக்கடவுளுக்குச் செய்ய வல்ல விரதங்களில் ஒன்று உண்டு அதனை ஆகம விதிப்படிக்கு முடித்த புண்ணியவான்கள் இம்மை மறுமை லாபங்களை அடைவார்கள், அதற்குத் திருஷ்டாந்தமாக இச்சரித்திரத்தைக் கேட்பாயாக எனச்சொல்வதானார். முன்னொரு காலத்திற் பகீரதச் சக்கிரவர்த்தியைப் பகைத்துக் கோரனென்னும் அவுணராஜன் அவன் இராஜ்ஜியத்தை முற்றிலும் அபகரிக்கச் சக்கிரவர்த்தி தன் மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கானகத்திலோடி அன்னங் கிடையாமல் அலைந்து கடைசியில் புகர் என்னுந் தவ சிரேஷ்டரின் அனுக்கிரஹத்தினாற் கந்த சுவாமிக்குப்பிரியமாகிய சுக்கிரவார விரதத்தை அனுஷ்டித்து முற்றிய காலத்திற் சண்முக நாதர் கிருபையுற்றுத் தமது வெற்றி வேலாயுதத்தையேவிக் கொடியனாகிய அவுணப் பகைவனைப் பிளந்தெறிந்து சக்கிரவர்த்தியை முன் போல அரசு செலுத்தி மகிழ்ந்திருக்கச் செய்தனர்.

...தைப் போலக் கந்தசுவாமிக்கு உகந்த விரதம் மற்றொன்றுஉண்டு, ...னையுஞ் சொல்லக் கேட்பாயாக. நாரத முனிவரானவர் விநாயக ...த்தியை உபாசித்துத் தான் சப்த ரிஷிகளிலும் முதன்மை பெறத் தக்க விரதமொன்றைப் போதிக்கவேண்டுமென வேண்டிக்கொள்ளப் பிள்ளையார், எனது இளையோனுகிய சண்முகப் பெருமாளுக்கு விருப்பமாகிய கார்த்திகை விரதத்தை முறையாய் அநுசரிக்கக் கடவை யெனத் திருவாய் மலர்ந்தனர். ரிஷிபுங்கவர் பன்னிரு வருடம் பக்தி வயிராக்கியத்துடன் அவ்விரதத்தை நடத்திவரச் சரவணபவன் அவருக்குக் காட்சிதந்து சப்த முனிவர்களினும் முந்திப் பேசிக் கொண்டாடத்தக்க மேலான பதத்தை யனுக்கிரஹித்தனர்.

சதுர்வேத பண்டிதனுன பிராமண னொருவன் இந்த விரதத்தை அனுஷ்டித்து முருகர் கடாக்ஷத்தினுல் அப்பிறவியை யொழித்துச் சூரியன் மரபில் மனுச்சக்கிரவர்த்தியாய் அவதரித்துச் சகல சௌகரியங்களையும் அனுபவித்து அரச நீதிகளையும் மனுவிக்கியான சாஸ்திரத்தையும் ஏற்படுத்தி நற்பேறு பெற்றனன்.

மற்றொரு பிராமணுேத்தமன் அந்தச் சிறந்த நோன்பைப் பல காலஞ்செய்து சிவ குமாரன் திருவருளின் படிக்குத் தன் மனதிற் சிந்தித்தவாறே திரிசங்கு மகாராஜனுகத் தோற்றிப் புகழ் பெற்றுக்கடைசியில் மோக்ஷ வீட்டைப் பெற்றுச் சவுக்கியமா யிருக்கின்றனன்.

இவையன்றி மற்றொரு மன்னனும் வேடனும் இவ்விரதத்தைச் செய்து வந்த சிறப்பினுற் சரவணபவன் அநுக்கிரஹப்படிக்கு அவர்கள் அந்திமான் சந்திமான் என்னும் இராஜ குமாரர்களாக ஜெனித்துப் பிர முகராய்ப் பூமண்டல முற்றும் ஆக்கினு சக்கிரத்தைச் செலுத்தி வாழ்ந்திருந்தனர். இத்தகைய மகிமைகளுள்ள கார்த்திகை விரதத்தை நடாத்தி எத்தன்மைத் தாகிய பேறுகளையும் பெற்றுச் சிறந்த புண்ணிய சீலர்களைக் கணக்கிட்டுப் பிரமனுலுஞ் சொல்லி முடிவதோ!

இஃதன்றிக் கந்த மூர்த்திக்கு உவக்கத்தக்க விரதம் மற்றொன்றுண்டு, அதனையுங் கூறக் கேட்பாயாக. தேவர்கள் ஒரு காலத்தில் தங்களுக்குச் சம்பவித்த துக்க வருத்தங்களைப் போக்கிக் கொள்வதாய்ப் பிரம தேவரை வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். பிதாமகன் அவர்களுக்குக் கந்தர் சஷ்டி விரதத்தை வரன் முறையாகப்

போதித்து அநுஷ்டித்து வரச் செய்ய அவர்கள் அதைப் பக்தி மாகக் கைக்கொண்டு முருகக்கடவுள் அநுக்கிரஹத்தினாற் சுகம திருந்தார்கள் என்று வசிஷ்டர் சொல்லக் கேட்ட சக்கிரவர்த்தியானவன் தானும் அதனை அநுஷ்டிப்பதாய் மனம் ஒருமித்து ரிஷிபுங்கவரை வணங்கி விடை பெற்றுத் தனது நகரத்தை அடைந்து அவ்விரதத்தினை முறைப்படி தனது இராஜ்ஜிய முதற் கொண்டு அநுஷ்டிக்கச்செய்து தானும் அதை வருஷந்தோறும் நடாத்திச் சண்முகநாதர் கிருபையினால் தனது மனோபீஷ்டங்களைக் குறைவின்றி அனுபவித்து வரும்போது, வலாசுரனென்பவன் பொன்னுலகத்திற் படையெடுத்துத் தேவர்களை வாட்டி இந்திரனையும் துறத்தி யடித்து விட்டான். மகபதி, முசுகுந்தச் சக்கிரவர்த்தியினது உதவியைப் பெற்று அவுணர்களை வேரறக் களைந்து கடைசியில் வலாசுரனையும் தனது வச்சிரப் படையால் தாக்கிக் கொன்று ஜெய சீலனாய்க் களித்துப் பின் சக்கிரவர்த்தியைத் தன் நகரத்திற் கழைத்துப்போய் உபசரித்திருந்தனன். அப்போது சக்கிரவர்த்தியானவன் அங்கெழுந்தருளி யிருக்கும் உமா பரமேஸ்வரரைப் பூசித்திருக்கும்போது குமாரசுவாமியும் அவன் பால் விளங்கக் காக்ஷிதந்து நின்றனர், முசுகுந்தன் பேரானந்தத்தில் மூழ்கிப் பலவாறாகத் தோத்திரஞ் செய்தனன். இப்படி யிருக்கும்போது பரமேஸ்வரன் அவனுடைய பக்திக்கு மகிழ்ந்து ஓ! சக்கிரவர்த்தி! உனது மெய்ப்பத்திக்கு மிகவுஞ் சந்தோஷித்தோம், நம்மை வெகு காலம் உபேந்திரர் ஆராதித்திருந்தவர் ஒருபோது சில காரணத்தினால் இந்திரனிடத் தொப்பி வித்துப் போக நேரிட்டது. உன்னிடத்தில் நமக்கு இரக்க முண்டானதால் நீ நம்மைப் பூலோகத்துக்குக் கொண்டுபோய்த் தாபித்துப் பூசிக்கக் கடவாயெனத் திருவாய் மலர்ந்தனர். சக்கிரவர்த்தி மகா பாக்கிய மென்று மனம் பூரித்து இந்திரன் உபசரிப்பிலிருந்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் மகவான் சக்கிரவர்த்தியைப் புகழ்ந்து உமக்கு என்னாலாக வேண்டியதைக் கேட்டுக்கொள்ளு மென்றனன். சக்கிரவர்த்தி நீர் பூசித்து வரும் சிவபிரானைத் தயை செய்து எனக்கு மெய்யன்புடன் கொடுப்பீராகில் நான் அத்தேவனைப் பூலோகத்திற்குக் கொண்டுபோய் என் பட்டணத்தில் தாபித்துப் புனிதனாவேனென வேண்டினன். அதைக் கேட்ட இந்திரன் திடுக்கிட்டு மனதைத் தேற்றிக்கொண்டு எனக்கு அன்புள்ளவரே! இத்தேவன் வரலாற்றைக் கேட்பீராக! மகா விஷ்ணுவானவர் தனக்கு ஒரு புத்

ரில்லாமல் வருந்திப் பரமசிவனைக் குறித்து வெகுகாலந் தவஞ்செய்
ர். பரமேஸ்வரன் கௌரியுடன் அவர் முன் பிரசந்நமாகி உன்
கோரிக்கையின் படிக்கு மிகுந்த சுந்தரவடிவும் தீர்க்காயுசும் பொருந்
திய ஒரு குமாரன் உண்டாவானெனக்கடாக்ஷித்தசமயத்தில் மாதவன்,
பரமன் பால் அமர்ந்திருக்கும் உமையவளிடத்திற் சற்றும் அன்பைச்
செலுத்தாமலிருக்க, லோகநாயகிக்கு மனங்கறுத்து மாதவனை உருத்
துப் பார்த்து நீ பெற விருக்கின்ற புத்திரன் என் பிராணநாயகன் அ
னல் விழித்தீயினிற் பட்டுச் சாம்பலாய்ப் போகக் கடவனென்று சபி
த்துத் தமது கர்த்தனைப் பல வந்தமாக வாரும்! வாரும்! என அழை
த்துச் சென்றனள். விஷ்ணு அதைக்கண்டு திடுக்கிட்டுத் தனது அப
ராதத்தினைத் தெளிந்தவராய்த் தக்ஷணத்திற் சிவ பிரானையும் லோக
நாயகி யாரையும் குமார சுவாமியையும் பாவனை உருப்படச்செய்து
பல்லாயிரக்கோடி வருஷம் தவஞ் செய்திருக்கின்றபோது பரமேஸ்
வரன் உமையவளுடன் அவருக்குக் காக்ஷி கொடுத்தனர். விஷ்ணுவா
னவர்களிசிறந்து இருவரையும் போற்றி நிற்கப் பார்வதி யானவள்
அவரிடத்தில் இரங்கி உனது பிள்ளையானவன் ஒருதினம் நாதன் நுத
ல்விழித் தீயிற் பட்டுச் சாம்பலாயிறந்து போனபோதிலும் பரமன்
திருவுள்ள முயற்சியினாற் பழய படிக்குத் தோற்றி யெக்காலத்திலும்
வாழ்ந்திருக்கக்கடவனெனச் சாபவிமோசனஞ் செய்தனள். பரமசிவ
மும் அவ்வாறே ஆசீர்வதித்து மறைந்தனர். மகா விஷ்ணு பாற்கடலை
ச்சேர்ந்து தனது மனதின் மூலமாய்ச் சுந்தரமுள்ள மன்மத குமா
ரனை உதிக்கச் செய்து அவன் தக்க பருவ மடைந்தபோது அவனுக்கு
இரதி தேவியை மணஞ்செய்வித்து மகிழ்ந்திருந்தனன். அக்காலத்
திற் பரந்தாமன் தான்முன் வழி பட்டிருந்த மூன்று திருவுருவங்களை
யும் தமது மார்பாகிய பீடத்தினிடத்தே யெழுந்தருளச் செய்து
போற்றி வைத்திருந்தனன்.

இப்படி யிருக்குங் காலத்தில் வாற்கல்லி என்னுஞ் சூரன் அவ
தரித்து எனது நாட்டிற் படை யெடுத்து என்னையும் துறத்தி விட்ட
னன். நான் அதைப்பற்றி மகா விஷ்ணுவினிடம் போய் முறையிட்
டுக் கொண்டேன். அப்போதவர் என்னிடத்தில் இரக்க முற்றுத்
தனது மார்பினிடத்தில் வைத்திருக்குந் தேவதைகளை என் முன்னோர்
களும் நானும் முடித்திருக்கின்ற தவப் பேற்றினால் எனக்களித்துப்

பின் அவர் தில்லை யம்பலத்திற்குச் சென்று சிவநாதனை வழிப அங்கு நின்றுங் கருடாரூடராய்க் கிளம்பி எனது பகைவனுகிய கல்வி யென்னும் அவுணராஜனைக் கொன்று எனக்கு முன் போ இந்திரப் பட்டத்தை யளித்தனர். அப்பால் நான் பெற்ற இந்த மூவ ரையும் அதிகப் பிரியத்துடன் ஆராதனை வழிபாடுகள் செய்துவருகின் றேன். எனக்கினிய தோழரே! நீர் மகா விஷ்ணுவினிடம் சம்மதங் கேட்டு வருவீராகுல் இந்த முத்தேவர்களையும் உமக்கு அளிப்பேனெ ன்றான். சக்கிரவர்த்தி நல்லதென்று மாதவனிடம் சென்று தாழ்ந்து அவருடைய சம்மதத்தைப் பெற்றுத் திரும்பி அதனை இந்திரனுக்கு த் தெரிவித்தனன். மகபதியானவன், சக்கிரவர்த்தியை யேமாற்றிவி டக் கருதித் தேவதச்சனைக் கொண்டு ஆறு தடவைகளாக அந்த மூன் று மூர்த்திகளைப் போலவே வேறு வேறு படைக்கச்செய்து அளித்த காலையில் முசுகுந்தன் பரமசிவ கடாக்ஷத்தினுல் அக்கள்ளத்தை உண ர்ந்து தள்ளித் தேவராஜன் திருவடிகளிற் பணிந்தனன். தேவராஜன் இரங்கி உடனே ஓ! துணைவரே! நான் முன்னம் கொடுத்திருந்தஆறு தேவதைகளுடன் இவர்களையும் பூமண்டலத்திற் கொண்டு போய்த் தாபித்துப் பூசிக்கக் கடவீரெனத்தான் பூசித்துவந்த உமா பரமேஸ் வர குமார மூர்த்தங்களை முசுகுந்தனிடம் கொடுத்தனன். அவன் மனப் பூரிப்புடன் பூமண்டலத்தி லிறங்கித் திருவாரூரில் முதன்மையான மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து மற்றத் தேவர்கள் அறுவரையும் நாகபட்டணம், திருநள்ளாறு, திருக்காருயல், திருக்கோளரியூர், திருவான்மியூர், வேதாரணியம், இவைகளில் எழுந்தருளச் செய்த னன். பின் சக்கிரவர்த்தி மன வெழுச்சியுடன் தனது பட்டணமாகிய கருவூரைச் சேர்ந்து அளவற்ற காலம் செங்கோல் செலுத்தி வரும் போது பரமசிவ கடாக்ஷத்தை நினைந்து தனது புத்திரனுக்குப்பட்டா பிஷேகம் செய்து வைத்துத் தான் தவவேடம் பூண்டு கானகம் சென்று அரிய தவங்களைச் செய்து பெறுதற்கரிய சிவபதஞ் சேர்ந்தனன்.

"வள்ளி நாயகியார் திருமணம்"

மிகவளத்தைக் கொண்டிருக்கும் தொண்டை நாட்டில் மேற்பா டியென்னும் பதி ஒன்று உண்டு. அதற்கருகில் வானத்தை அளாவப் பருத்து ஓங்கிய பருவதம் ஒன்று இருக்கிறது. அது வள்ளிநாயகி யாரைத் தன்னிடத்திற் படைத்திருக்கும் மகத்துவத்தினுல் வள்ளி

யென்னும் பெய்ரைக் கொண்டிருக்கும். அதிற் சிவகுமாரன் ...ாமங்களில் ஒன்றாகிய குமரனென்னும் பேரைப் படைத்திருப் ...ன ஒருவன் தன் துணைவியுடன் சுப்பிரமணியக்கடவுளைக்குறித்து அளவற்றகாலம் செய்துவரும் விரதபலத்தினால் சில பிள்ளைகளைப்பெற்றும் புத்திரி யில்லாமையால் அந்தப் பாக்கியத்தையும் கிடைக்கப்பெற்றுக்களிக்க விருப்புற்றவனாய்த் தங்கள் குலதேவதையா யிருக்கின்ற சுப்பிரமணியக் கடவுளுக்குப் பூசனை வழிபாடுகளும் திருவிழாக்களும் வெறியாடல்களும் சம்பிரமமாக நடத்திக் கொண்டிருந்தனன்.

மேற்குறித்த மலைச்சாரலின் அருகில் தழைத்தோங்கும் சோலையின்கண் சிவமுனிவரென்னும் தவசிரேஷ்டர் பர்னசாலை செய்துகொண்டு அதிற் சிவத்தைக்குறித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தனர். அவருக்கு முன் வெற்றி வேலாயுதக் கடவுளுடைய திருவருளினால் பொன்மயமாகிய அழகிய பெட்டைமான் ஒன்று தோன்றியது. ரிஷிபுங்கவர் அதனைப் பார்த்தவுடன் தருணமங்கையை நேர்ந்த காமுகனைப் போலக் காமக்கவலையிற் பட்டுப் புணர்ச்சியை அனுபவிக்க விரும்பிப் பின்விரகத்தை ஒழித்துத் தவத்தைப்பேணி யிருந்துவிட்டனர். அந்தச் சிவயோகியினது திருஷ்டி சம்பந்தத்தினால் பெண்மானினுடைய உதரத்தில், அத்தலத்திற் கருகில் தவம்செய்திருக்கும் மகாவிஷ்ணுபெற்றகன்னிகையானவள்குமாரதேவர் கட்டளைப்படிக்கு அத்தருணத்தைத் தெரிந்து பிரவேசித்திருந்தனள். அந்தமானனது அப்பாற் பூரணகருப்பமாகி வள்ளிமலையின் பேரில் வேடப்பெண்கள் சில்லாக்கோலினால் வள்ளிக்கிழங்கைக் கல்லியெடுத்திருக்கும் குழிகளினொன்றில்வள்ளிநாயகியாரை யீன்றது. ஒப்புவமையில்லாத எமது இறைவியானவள் ஒருமானின் இடமாகத் திருவவதாரம்செய்தது ஒரு திருவிளையாடலாக நினைப்பதன்றி வேறுமுண்டோ! அந்தப்பெண்மான் தன் இனமில்லாத பெண்குழந்தையைப் பார்த்துப் பயந்து ஓடிப் போனது. எமது தலைவியானவள் ஏகாங்கியாய்ப் பசியினால் வருந்திச் சரஸ்வதியின் இன்னிசைப் பெருக்கோவெனக் கேட்போர் சந்தேகிக்க அழத்தொடங்கினள். சண்முகதேவர் முயற்சியினால் வேடராஜன் தன் தேவியுடன் பலர் சூழ்ந்துவரத் தினைப்புனங்களைச் சுற்றிப்பார்த்து வரும்போது அம்மையின் அழுகுரலைச் செவிக்கு அமுதாகக் கேட்டுத்தேடிவந்து பெண்ணரசியைக் கண்டு தேகம் பரவசமாகிக் குழந்தையை மெல்ல யெடுத்துத் தன் துணைவியின் கரத்திற் கொடுத்து நமது

குறை இன்று ஈடேறியதென்று களித்தனன். வேடர்களுக்
யானவள் பெண் அமுதத்தைக் கரங்களில் ஏந்தியவுடன் தன்
கைகள் பூரித்துச் சொரிகின்ற பாலமுதத்தை அம்மைக்குத் தெ
ட்டக்கொடுத்துச் சீராட்டி மகிழ்ந்தனள். வேடராஜன் தன் தேவியு
டன் மகளையும் எடுத்துக்கொண்டு தன்பதியாகிய சிற்றூரைச் சேர்
ந்து குமாரக்கடவுளுக்குச் சிறப்பொடு பூசனை வழிபாடுகளை முற்றியிரு
ந்தனன். பின் எமதன்னையானவள் பருவக்கிரமமாகச் சப்பாணி கொட்
டியும் தவழ்ந்தும் தளர் நடைகொண்டும் தோழிகளுடன் விளையாடி
யும் மணிகளை வாரிக்கொழித்தும் முத்துகளினால் சிறுவீடு கட்டியும்
நிலாச்சோறு சமைத்தும் அம்மானை ஆடியும் சிறுதேர் உருட்டியும்
அம்புலியைக் கூவியும் புஷ்பப் பந்தாடியும் மாலைகள் செய்து சூடியும்
இவ்விதவினோதத் திருவிளையாடல்களைச் செய்து பூர்வக்கியானம் சற்
றுமில்லாவராய்த் தமது தாயானவள் பலவித உபசாரங்களைச் செய்
துவர விருத்திச் சந்திரனைப்போல வளர்ந்து குமரன் புயாசலங்களைத்
தழுவுவதற்கு இந்தப் பருவம் தகும் தகும் எனக் கொண்டாடும் படி
க்குப் பன்னிரண்டு வயது நிறைந்த பாலகுமாரத்தியாகக் காணும்
தருணத்தைத் தாய்தந்தையர் தெரிந்து களித்தவர்களாய்த் தங்கள்
குலமுறையைப் பாராட்டி வள்ளிநாயகியாரைத் தினைப்புனத்தின்
பரணினிடத்திற் கிளிகளாதிய பறவைகள் இறங்கிக் கதிர்களைக் கவர
வொட்டாமற் காத்திருக்க வைத்திருந்தனர். வள்ளிநாயகியாரும் அதிக
ஸந்தோஷத்துடன் மற்ற வேடுவப் பாவைகளுடன் யானைத்தந்தங்க
ளைக் கால்களாகச் சேர்த்து வயிரச்சட்டங்களைப் பரப்பியுள்ள உயர்
ந்து விளங்கும் பரண் பேரில் ஏறி வீற்றிருந்து தமது திருக்கரங்களிற்
பற்றியகவணை ஒவ்வொருதரம் சுழற்றிப் பூவைகாள்! மாடப்புறாக்காள்!
ஆலோல மெனக்கூவி இரத்தினங்களைக் கடாவியோட்டியும், மயில்
காள்! கிளிகாள்! ஆலோல மென்று அதட்டியும், குயில்காள்! சேவல்
காள்! ஆலோல மெனத் துரத்தியும் இவ்விதங்களாகப் பட்சிக் கூட்ட
ங்களையும் மிருகப் பெருக்கையும் ஓடும்படி பறக்கடித்துத் தினைப்புன
த்தை ஏமாறுமற் காவல் புரிந்து பிதாவினால் வேளைக்கு வேளைகொண்
டுவந்து கொடுக்கப்பட்ட தேன் தினைமா பண்டு பலாதிகளைத் திருப்தி
யாக உண்டு மனவெழுச்சியுட னிருக்கின்ற தருணத்தில் பாலசுப்பிரம
ணிய தேவர், முன்னம் அவளுக்கு அனுக்கிரஹித் திருக்கின்ற படிக்
குக் காட்சிதந்து ஆண்டு இரட்சிக்கத் திருவுள்ளத்திற் கொண்டவ

...ந்தமார் தன வரையில் தெய்வயானை யம்மையுடன் குலவி யிரு ...ா அத்தலத்திலும் முன் போலவே காட்டி வெளிப்பட்டுத் தனிய ...க வந்து திருத்தணிகை வரையைச்சேர்ந்து காலம் பார்த்திருந்தனர். அப்போது உலகம் எங்கணும்உலவி வரும் நாரதரிஷியானவர் தினைப் புனங்களி னொன்றில் ஆயாலோட்டிக் காத்திருக்கின்ற வேடராஜ புத்திரியைத் தெரிசித்தவுடன் உள்ள முருகிக்கரங்களைக் கூப்பிப் பாலசுப்பிரமணிய தேவருக்குப் பாரியாதற் பொருட்டு அரியதவங்களைச் செய்து அவருடைய அருளையும் பெற்றிருப்பதால் இந்த மாதாவினது பெருமிதங்களை உடனே சிவகுமாரனுக்குத் தெரிவிப்பேனென த் திருத்தணிகையைச் சேர்ந்து கந்தசுவாமி யாரை விழிகள் களிக்கக்கண்டு தீர்க்கதண்டம் சமர்ப்பித்தெழுந்து குமாரக்கடவுளே! இதற்குச்சமீபத்திலுள்ள மலையில் வள்ளியம்மை யென்னுந் திருநாமத்தைக்கொண்டு பன்னிரண்டு வயது பாலகுமாரத்தியாய்ப் பரணிலிருந்து தினைப்புனத்தைக் காவல் கொண்டிருக்கும் மாதரசைக்கண்டு வந்தேன். அந்தமாதாவின் சுந்தரவடிவின் பெருக்கையும் குணாதிசயங்களையும் பார்க்குமிடத்தில் ஸ்ரீ மகாலெட்சுமிக்கும் மேற்படக் காணுகின்றது. தேவரீர் எழுந்தருளி அந்காயகியாரைக் கண்டு களிக்கலாகுமென விண்ணப்பஞ் செய்து தனதிருப்பிடம் சென்றனர். குமாரசுவாமியார் அக்கன்னிகை யினிடத்தில் மையல் கொண்டு வேடக்கோலம்பூண்டவராய்ப் புறப்பட்டுத் தமது சித்தத்தைப் புறம்பிற் செலுத்தாமல் ஏகமனதாய்ப் பயிரைப்போற்றி வரும் வேடர் பெருமான் தவக்கொழுந்தை வந்து கண்டவுடன் நம்கடவுளுக்கு விரகாக்கினி மேலிட்டுச் சகிக்கக்கூடாமையால் மெல்ல மெல்ல அம்மையார் இருக்கும் பரணுக்கருகிற் சென்று அவள் மீதில் தமது விழிகளைச் செலுத்தி இதனைக் கூறுவதாயினர். பாலையொப்ப வெளுத்து விஷத்தினுங்கறுத்து விளங்கும் நேத்திரங்களையுடைய பெண்கள் சிகாமணியே! உமது சுந்தரவடிவினைக் கண்ட மாத்திரத்தில் எமக்கு மனந்தாளவில்லை. உம்மைப்போன்ற வரை எவ்வுலகத்திலும் கண்டதில்லை. தினைப்புனத்தைக் காக்கும் படிக்கு உம்மைத்தனித்து விட்டிருக்கும் நியாயம் அடுக்குமோ? உம்மைவிட்டுப் போக மனமில்லாமல் மதிமயங்கி வருந்துகின்றநாம் களிக்கும்படியாக உமது பெயரைச்சொல்லும்? அதற்குச் சம்மதமில்லாவிடில் நீர் வாசஞ்செய்யும் சிறந்த பதியாதெனப்பேசும்? அதற்கும் இஷ்டமில்லாமற் போமாயின் உமது சிற்றூரு

க்குப்போகும் மார்க்கத்தையாவது திருவாயைத் திறந் செய்து செப்பவேணும் ஓ! பெண்கள் நாயகமே! என் கேள்வ காதுகொடுத்து வினவி மறுமொழியாட மனமிரங்கீராயின் என்னசெய்வேன்? இவை நிற்க, என்மனமும் தேகமும் பூரித்துக் களிக்கும்படிக்கு நகை முகத்தை யாயினுங்காட்ட வொண்ணுதோ? அல்லது சேற்கெண்டையைப் போலப் பிறழும் திருநோக்கத்தைக்குளிர்ச்சியாக என் பேறிற் செலுத்தலாகாதோ! உமது தரிசனையைப்பெற்ற மாத்திரத்தில் நிலைகலங்கிப் பொறிகள் மயங்கிக் காமவலையிற்பட்டுழலும் தமியேன் களித்துப் பிழைக்கும் மார்க்கமொன்றைக்காட்டாமலும் சற்றும் என்னிடத் தன்பைச் செலுத்தாமலும் இரக்கமற்று இவ்வாறேஇருப்பீராகில், சத்தியமாகச் சொல்லுவேன்! எக்காலத்திலும் தீராத பழி பாதகம் உம்மைச் சேருவதற் கையமில்லை! பராமுகமாயிராமல் இதற்கொரு வகைதேட வேண்டும்! என்று உலையிற்பட்ட மெழுகைப்போல மனம் கரைந்து மறச் சிறுமியின் மேற்கொண்ட மையல் வலையில் அகப்பட்டுக் கொண்டு திகைப்பவனை யொப்பப் பற்களைக்காட்டி முகமலர்ச்சியுடன் வருந்திக் கெஞ்சிக் கெஞ்சிக் கரங்களை நீட்டி நீட்டிக் குறை யிரந்து நின்றனர். அக்காலத்திற் பால சுப்பிரமணியக் கடவுள் நடித்த திருவிளை யாடல்களைப் பார்க்கு மிடத்திற் சோடச கலைகளை யுடைய சந்திரன் விளக்கமானது அலைகள் மிகுந்த நீர்ப் பெருக்குள் தோற்றும்போது கலங்கிக் காட்டுமாறு போல விருந்தது. அதுசமயத்திற் கேசவன் திருக்குமாரியிடம்வேடராஜன் தன்பரிசனருடன் தினைப்புனத்திற்கு வரும் அரவத்தைச் சுந்தர சண்முகர் தெரிந்தவுடன் தமது தெரிசனையை அவர்களுக்குக் காட்டாமல் மறைத்து வேங்கைமரக் கோலங்கொண்டு நின்றனர். வேடராஜன், புத்திரிக்குத் தின் பண்டங்களைக் கொடுத்துத் திரும்பும்போது பக்கத்தில் தழைத்தோங்கி நிற்கும் வேங்கையின் வளத்தைக்கண்டு அதிசயித்தனன். அவனுடன் வந்த கடின சித்தமுடைய வேடர்கள் இது பரியந்தம் இவ்விடத்தில் இந்த மரத்தைக் கண்டது கிடையாதே! இதனாற் சில தீங்குகள் நேரிடக் கூடியதாயிருக்கும். ஒரு நிமிஷத்தில் இதனை முறித்தெறிவோம் எனமேலிட்ட காலத்தில் அரசன் தன் குமாரத்தியைப் பார்த்து அம்மணீ! இம்மரம் வந்த காரணமென்ன வென்று வினவ, அம்மை பயந்து அப்பனே! எனக்கொன்றுந் தெரியாது மாயமா யிருக்கிறதென்று கூறக்கேட்டுப்

...னவன் நீ இந்த மரத்தின் அழகிய புஷ்பங்களைப் பறித்து
...ாடிக் காலங் கழிக்க யேதுவாயிருக்குமென்று சொல்லிப் பின்
வேடர்களை அதை வெட்டுவதினின்றுந் தடுத்துத் தன்பதிக்குச் சென்
றனன். அவர்கள் மறைந்தவுடன் சுப்பிரமணிய தேவர், வேங்கையுரு
வை மாற்றிக்கொண்டு அதிக சுந்தரமுள்ள மானிட வடிவைத்தாங்கி
வேடராஜ புத்திரிக் கெதிரில் நின்று, ஏ! தேமற் பரந்து விளங்குந்
தன பாரங்களையுடைய குறப்பாவாய்! உமது அழகைக் கேள்விப்பட்
டு வெகு தூரத்திலிருந்து வந்தேன்! உமது திருவடிகளல்லது எனக்கு
வேறு கதியில்லை! எக்காலத்தினும் உம்மைப் பிரிய வறியேன்! நமது
விரகாக்கினி தணியும் படிக்கு எம்மை ஆலிங்கனஞ்செய்து மருவு
வீராயின் நீர் எதனைக் கேட்டாலும் தருவோம்! என்று காமலாகிரிக்
குரிய வருத்தங்களைக் காட்டி நிற்க, வேடராஜன் புத்திரியானவள் அவ்
வாக்கியங்களைக் கேட்டுக் குறிப்பாய்க் குமாரசுவாமியின் மனக்கருத்
தைநிதானித் தறிந்து கொண்டு இவர் வடிவிற் பெருக்கும் குணாதி
சயங்களும் கொஞ்சிப்பேசும் வார்த்தைகளின் குளிர்ச்சியும் வெகு
நேர்த்தியென்று நாண மிகுதியினால் தலையை யிறக்கி யிவ்விதம் பேசுவ
தாயினள். நான் இழிகுலமாகிய வேடர் பாவையாகும். உம்முடைய
வடிவின் சீரையும் நடை கொடி பாவனைகளையும் பார்க்குமிடத்தில் இ
ராஜ குமாரனாகவும் புவனங்கள் அனைத்தையும் பாதுகாத்து இரட்
சிக்கும் முதல்வனாகவும் காணுகின்றது. இத்தகைய தேவரீர் ஹீன
ளாகிய என்னைத் தழுவ நினைந்து தகாத வார்த்தைகளைப் பயமற்றுப்
பேசுவது பழி யல்லது நன்மார்க்கத்துக் கடுக்குமோ! வீரத்தன்மை
பொருந்திய புலியானது பசிப் பிணியினால் வாடுமாயினும் அற்பமாகிய
புல்லைத்தின்ன நினைப்பதுண்டோ! எனப் பல விதங்களில் வள்ளிநாயகி
யார் மறுதலை பேசிய சமயத்தில் வேடராஜன் சகல ஆடம்பரங்களுட
ன் வருகின்றதனைத் தெரிந்து எமதன்னையானவள் திடுக்கிட்டு எமது
நாயகனை நோக்கி ஐயனே! தாட்சணிய மற்ற கொடிய வேடர் வருகி
ன்றனர். ஆதலால் துரிதமாயிந்த எண்ணத்தை ஒழித்துப்போய் விட
க் கடவீரென்று வேண்டிக் கொண்டனள். அவள் அன்பிற்கு முரு
கர் மனம் பூரித்து ஒரு சன்னியாசி வேடங்கொண்டு, அதட்டி உருட்
டி மிருகங்களைத் துரத்தி வரும் வேடர்கள் எதிரிற் போய் அவர்களு
டைய இராஜனைக்கண்டு திரு நீற்றை யெடுத்துச் "சிவநாதனே இரட்
சிக்கக் கடவன்" என அவனுக்குக் கொடுத்து ஆசீர்வதித்தனர். வேட

ராஜன் மகிழ்ந்து உமக்கு வேண்டியதென்ன வென்று கேட்
சந்நியாசி, இவ்வள்ளி வரையில் உதித்திருக்கின்ற குமரியைக்
இன்பமாயிருக்க நெடுந்தூரத்திலிருந்து வந்தனம். அதுவே நீ எமக்குச் செய்ய வேண்டும் ஒரு உபகாரம் என்று சிலேடையாகச் சொல்லினர் வேடராஜன், தேவரீர் அப்படியே இந்தக் குமரி தீர்த்தத்தில் மூழ்கி இஷ்டம் போலிருந்து கொண்டு தனித்திருக்கும் எனது புத்திரியினிடமும் அடிக்கடி வந்து விசாரணைசெய்து கொண்டு போம்எனக் கட்டளை யிட்டனன். பின் அரசன் தன் குமாரத்தியினிடம் வந்து கனி வகைகளாதி உணவுகளைக் கொடுத்து இந்தப் பெரியவரும் உனக்குச் சகாயமாக விருப்பரெனச் சொல்லித் தன் பதிக்குச் சென்றனன். சந்நியாசி, தனித்திருக்கும் வள்ளியம்மையைப் பார்த்து, என்ன செய்வேன்! பசியால் அதிகக் களைப்பாய் வருகின்றது! என்று தள்ளாடுவதைக்கண்ட எமதன்னை மிகவும் இரக்கப் பட்டுப் பெரியவரே! இதோ யிவைகளைப் புசியுமென்று தினை மா தேன் கனிகளை நீட்டினள். சந்நியாசி ஆவலுடன் அவைகளை வாங்கித் துரிதமாய் உண்டனர். அச்சமயத்திலது தமது கண்டத்தில் அடைத்துக் கொண்ட தென்பதாய் மிரள மிரள விழித்துப் பாசாங்கு செய்து மறநாயகியைத் தண்ணீர் தர வேண்டினர். பாவையானவள் ஓ தவ சிரேஷ்டரே! சீக்கிரமாயிக்த ஏழுமலைகளையுந் தாண்டி அங்குள்ள திவ்ய தீர்த்தத்தை யுண்டு சிரமத்தை தீர்த்துக்கொள்ளும் என்றனள். சந்நியாசி யானவர், அடி பெண்ணமுதே! வழியை நான் எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறேன்? நீர் துரிதமா யென்னுடன் வந்து சுனை நீரைக் காட்டித் திரும்பி விடும்! என்றனர். வள்ளி நாயகியார் அதனை எதார்த்தமாக நம்பி வாருமென்று அவரை அழைத்துச் சென்று கபடச் சந்நியாசிக்குத் தாகத்தைப் போக்கி வைத்த காலையில் அவர் தேவியைக் கிருபையாகப் பார்த்து ஓ! பெண்ணரசியே! எனது பசிப்பிணியையும் தாகத்தையும் தீர்த்து வைத்தீர்! அடியேன் கொண்டிருக்கும் மோகக் கவலையையும் தணியச் செய்வீராகில் நமக்கு எல்லாக் குறைகளும் நிவிர்த்தியாகும் என்று தமது இருகரங்களையுங் கூப்பிக்கொண்டு வேண்டி நின்றனர். அதைக் கேட்ட நங்கைநகைத்துப் பெருமூச்செறிந்து நடு நடுங்கிப் பின் சீறி ஓ! முதியரே! நீர் மதி மருண்டு தகாத வார்த்தைகளைப் பேசினீர். குற்றமற்ற தவத்தரைப்போல வந்து என்னை வஞ்சித்து நெடுந்தூரங்கொண்டு வந்து இப்போது

ணஞ்செய்ய விருப்புற்றது உமக்கு நீதியோ! இதிற் சிறிதே வேடருக்குத் தெரியுமாகில் நம்மிருவருக்குங் கொடிய தீங்குகள் சம்பவிப்பதற்கு ஐயமில்லை! வாயில் வந்தபடிக்குப் பிதற்றலாமா! என்று தூறி நான் எனது இருப்பிடம் போகிறேனென்று நாயகியார் வேகமாய் நடக்கும்போது எமதையன் பெண்கொடி யினது மனவுறுதிக்கு மெச்சித்திகைத்தவராய்ச் சற்று யோசித்துத் தமது முன்னவனாகிய விநாயக மூர்த்தியைச் சிந்திக்க அவர் மதயானையின் கோலங்கொண்டு துதிக்கையை நீட்டி வீறிட்டு வள்ளிநாயகியாருக்கு எதிரில்வர அதை அவள் கண்டு பயந்து நடுங்கிச் சரேலெனத் திரும்பி வேகமாய் ஓடிவந்து தவவேடம் கொண்டிருக்கும் குமாரசுவாமியின்பக்கத்திற் சேர்ந்து சுவாமீ! இத்தருணத்தில் அடியாள் பேரில் இரக்கமுற்று மதயானையைத் துரத்தி யென்னைக் காக்கக்கடவீர்! நீர் குறித்தபடிக்கெல்லாம் சம்மதப்படுவேன்! சம்மதப்படுவேன்! என்று அவர் பின்புறத்தில் வந்து முதுகைகட்டித் தழுவி யணைத்திருந்தனள். குறப்பாவையினது கொங்கைகள் தமது முதுகில்தாக்கியபோது குமரக்கடவுளுக்குத் தேகம் பூரித்து அவளுடைய திருமுகத்தைத் திரும்பிப்பார்த்துப் பெண்கள் சிகாமணியே! பயப்படவேண்டாம்! என்று ஆதரித்துத் தம் மூர்த்தோனைப் பிரார்த்தித்துச் செல்ல விடுத்தனர். பின் சரவணபவன், வள்ளியம்மையைத் தழுவிக்கொண்டு போய் ஒரு பூங்காவைச் சேர்ந்து தமது உள்ளமுந் தேகமும் பூரித்துக்களிக்கத் தக்கதாக அவளைக் கலந்து இன்புற்று அவளிடத்திற் பெருங்கருணையாகச் சடுதியில் மயில்வாகனரூடராய்க் காட்சிகொடுத்தனர். மங்களமாகிய அந்தத் திருக்கோலத்தை அம்மையார் கண்டவுடன் தமது விழிகளில் ஆனந்தவாரி பெருகத்தேகம் பூரித்து மனமகிழ்ச்சியுடன் நாயகனை மும்முறை வலம் வந்து பலதரம் அவர் திருவடிகளிற் பணிந்து கரங்களைக் கூப்பிக்கொண்டு இதுபரியந்தம் பல நடனங்களைக் காட்டி வீண்காலத்தைக் கழித்த காரணமென்னோ! பாலளாகிய யான் பெண்மதியினால் தமது பெருமைகளைக் கண்டறியாமற் பலகுறைபாடுகளைச் செய்தேன்! அவைகளை க்ஷமித்து இரட்சிப்பது தமது பாரமாகும்! இன்று முதல் நாயினேனை வழியடிமையிற் சேர்த்து ஆட்கொள்ள வேண்டும் என்று பலவிதங்களில் நாயகியார் போற்றும்போது, குமரகுருபரன் அவளிடத்திற் கடாக்ஷ வீட்

சன்னியத்தைச் செலுத்திப் பெண்ணரசியே! நீ முன்னம்
மாதுலராகிய ஸ்ரீமகா விஷ்ணுவுக்கு மகளாய் நம்மைச்சேர்ந்து
க்கவிருப்பங்கொண்டு தவங்களைச் செய்திருந்த காலத்தில் நாம் உன
க்கு அநுக்கிரஹித் திருந்தோம். அந்தப்படிக்கு இப்போது நாம் உன
க்குக் கடாக்ஷிக்க வந்தனம். நம்மைக்குறித்து நீபேசிய வாசகங்களைத்
தோத்திரமாகக் கொண்டனம். நீ இவ்விடம் வந்து நேரமாயிற்று
தினைப்புனத்தைக் காக்கும்படிக்கு முன்னே போகக்கடவாய், நான்
பின்னே வருகின்றேனெனத் திருவாய் மலர்ந்தனர். வள்ளிநாயகியார்
கணவனைப் பிரியமனமில்லாத வளாகப்பிரிந்து போய்த் தினைப்புனத்
தைச் சேர்ந்து முன்போற் பரணிலேறி ஆயாலோட்டி யிருந்தனள்.
அத்தருணத்தில் அடுத்த கொல்லையில் தினைகளைப் போற்றியிருந்த
பாங்கியானவள் சிலசந்தேகங்களைக் கொண்டு தலைவியிடம்வந்து சேவி
த்து அவள் நடைநொடி பாவனைகளும் பேச்சும் கருத்தும் வேறுபட்
டுக்காட்டுவதைக் குறிப்பாய்த் தெரிந்து, தாயே! நீர் இக்காவலை விட்டு
எவ்விடத்திற்குப் போனீர்? என்றனள். தலைவி மிகவும் நாணினவ
ளாய், அடி தோழி! வெப்பம் சகிக்கமாட்டாமற் சுனைநீராடி வந்தே
னென்றாள். தோழி நகைத்து நீர்பேசியது வெகுநேர்த்தி, விழிகள்
சிவக்கவும் அதரம் வெளுத்து காட்டவும் சரீரம் வாட்டமுற்று வியர்
க்கவும் கொங்கைகள் பசலைமூடி விம்மவும் இத்தகைய பலமாறு
பாடுகளைத்தரவல்ல சுனையிருக்கு மிடத்தைக் காட்டக்கடவீர் என
வினவிய போது, நாயகியார், பாங்கியைக் கோபித்துப் பார்த்து என்
பிராண பதமாகிய தோழி யென்று நான்உன்னை நம்பி யிருக்கும்போ
து என்னிடத்திலேதோ சில குற்றங்களைக் கற்பிக்கின்றனை! சற்றும்
இரக்கமற்று இப்படிக்குப் பேசுவையோ வெனப் பிணங்கி இவ்விதங்
களில் வாதாடி யிருக்கும்போது, சிவ சுப்பிரமணிய தேவர் வில்லை
இடக்கரத்திற் கொண்டு வலக்கரத்திற் பாணத்தைப்பற்றி வேட்டை
யாடி வருகின்றவனைப் போல வேகமாய் வந்து ஓ! பெண்களே, என
து பாணத்தாற் காயப்பட்டு ஓடி வந்த ஒரு யானையைக்கண்டீர்களோ?
என்றனர். பாங்கி, அவரை நிதானித்து நோக்கி, உமது சூரத்தன்மை
களை மங்கையரிடத்திற் சொல்லியாவ தென்னை என்று மறுமொழி
கூறி, ஐயர் நிலைமைகளையும் தலைவியின் நாட்டத்தையும் தீர்மானித்த
வளாய் இனி இவ்விடத்திலிருக்க லாகாதென்றெண்ணித் துரிதமாய்
அடுத்த கொல்லையைச் சேர்ந்திருந்தனள். அப்போது வீரம் பேசி

சேவகன், தோழியைப் பின் பற்றிச் சென்று ஏ! பெண்ணே! பனுக்கு உறுதியாகிய சுற்றமும் சினேகிதரும் நீங்களே! உங்களி வருக்கும் வேண்டிய வெத்தகைய பொருள்களும் இந்த நிமிஷத்தில் தருவித்துக் கொடுக்க காத்திருக்கின்றனன். கோபங் கொள்ளாமற் சற்று அநுக்கிரஹம் செய்யவேண்டுமென்ற குறிப்பினைத் தோழி தெரிந்தவளாய் ஐயனே! எங்கள் குலத்துக்குப் பூமியுள்ள பரியந்தம் தீராத பழிப் புரையை நாட்ட வந்தீர். ஆயினும், இழிவாகிய மறவர் குலப் பாவையை உம்மை யொத்த கண்ணியவான் விரும்புவது அழகோ? இது தகாதனவாதலால் மறந்து விடுமென்ற தோழியைக் குமர குருபரன் பார்த்து, எமது நெடிய மாமனாகிய ஸ்ரீ மகா விஷ்ணு பெற்ற அமுதத்தை வேடர் வருந்திப் பெற்ற தவக் கொழுந்தை எனக்குக்காதலைத்தந்து நல்லருள் செய்த பெண்கள் நாயகத்தை மறத்தி யெனப் பேசுவது பேதமையா மெனக் குறித்த இனிய வாசகங்களைக் கேட்ட பாங்கியானவள் யாதுந் தோன்றாமல் மயங்கி ஐயரே! வேடர் திரட்சியாயிவ்விடம் வருவார்கள், அவர்கள் மிகவும் கொடியவர்கள், அவர்கள் சில சந்தேகங்களைக் காண்பாராயின் முன் பின் பாராமல் உம்மைக் கொலை செய்து விடுவார்கள், எங்கள் பிராணனுக்கும் ஆனிவரும், நீர் இவ்விடம் விட்டுப் போய்விடும் என்றனள். சரவணபவன் நகைத்து ஏ! பெண்ணே! உமது இறைவியுடன் என்னைக் கூட்டுறவு செய்யாமற் போவீராயின் ஏட்டினிடத்தில் அவன் வடிவை யெழுதி மடலேறி உங்கள் ஊர்வீதிகளி லோட்டத் துணிந்திருக்கின்றனன். அக்காலத்திற் சகலரும் பகிரங்கமாகத் தெரிந்து கொள்வர். இதனைச்சத்தியமாக நம்பக்கடவீ ரென்றவுடன் தோழியானவள் இது வென்ன அநியாயமென்று பின் சற்று மனமிரங்கி, நீர் அதோ காணுகின்ற மாதவிச்சோலையிற் போய் மறைந்திரும்பீராயின் எங்கள் மங்கையை அவ்விடத்துக்கு அழைத்து வருவேனென்று நிச்சயங்கூறி அவரை அனுப்பிவிட்டுத் தன் தலைவியினிடம் வந்து சேவித்துக் குமரனுக்குண்டாயிருக்கும் காதல்மிகுதியையும் அதற்கு இசையாமற் போனால் வரும் அவதூறுகளையும் விவரித்துச் சொல்லித் தலைவியை மெல்ல அழைத்துக் கொண்டு போய் மயிலினங்கள் களித்தாடும் குளிர்ந்த மாதவிப் பொங்கரில் வைத்துப் பாவாய்! நீர் இங்கிருக்கக்கடவீர் நான் புஷ்பங்கள் பறித்து வருகிறேனென்று குறிப்பாய்ச் சொல்லிப் போயினள். வள்ளி நாயகியார், காந்தனை நினைந்து சுற்றிலும் விழிகளைப் பர

ப்பிப் பார்த்திருக்கின்ற காலையில் அளவிறந்த மகிழ்ச்சியுடன் வி பெருமாள் அவள் எதிரில் வந்து நின்றனர். வள்ளிநாயகியார் எ இறைவன் பாதங்களில் சேவித்தனள். கேசவன் மருமகன் தமது திருக்கரங்களை நீட்டி அவளை வாரியெடுத்தணைத்து இன்பநலங்களை அநுபவித்து இருவரும் தேகப்பரவசராய்க் களித்தபிற்பாடு குமாரசுவாமியானவர் தேவியை நோக்கி நீ முன்போலத் தினைப்புனத்திற் போயிருப்பாய், நாம் நாளையத்தினம் வருவோமெனத் திருவாய் மலர்ந்து மறைந்தனர். வள்ளியம்மையார் எமதிறைவன் தோற்றங்காணாமையால் வருந்திப் பொதும்பரைக் கடந்து வரும்போது பாங்கியும் எதிர் சென்று தான் பறித்து வந்த புஷ்பங்களை அவளுக்குச் சூடிப்பின் இருவரும் தங்கள் இருப்பிடத்திற் சேர்ந்திருந்தனர்.

அத்தருணத்தில் தினைக்கதிர் முற்றி விளைந்து விட்டதனை வேடராஜன் தெரிந்து குறிச்சியிலிருப்பவ ரனைவரையும் ஒப்படிக்காக வரும்படிக்குக் கட்டளையிட்டுத் தன்பெண்ணைப் பார்த்து அம்மணி! நீ இனி நமது சிறு குடிலைச்சேர்ந்து சௌக்கியமாயிருப்பை யென அவளை அனுப்பிவிப்பதாயினன். அம்மையானவள், கணவன் நாளை இங்குவந்து தேடுவாரே என்று மனம்வருந்திப் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் சங்கதியைக் குமரனுக்குத் தெரிவிக்க மன்றாடிக் கேட்டுக் கொண்டவளாய்த் தன்மனையைச் சேர்ந்து விளையாடல்களைத் துறந்து ஆவலுடன் வந்த அன்னையையும் வளர்த்த தாயையும் கவனியாமற் குமரனையே யென்றும் நினைந்து துக்கசாகரத்தி லழுந்திப் பிராணன் உண்டோ இல்லையோ வெனச்சங்கை கொள்ளும் படிக்குச்சோர்ந்துபிரக்ஞைதப்பி விழுந்தனள். அதனைக்கண்ட செவிலித்தாய்முதலிய வேடப்பெண்கள் அதிகக் கிலேசத்துடன் அம்மனைவாரியெடுத்து அவளுடைய உறுப்புகளைக் குறிப்பாகப் பார்த்து அவள் திருமேனி துவண்டுகாட்டுவதையும் விழிகளில் நீர் பெருகுவதையும் நரம்புகள் பசலைகொண்டு பூரித்திருப்பதனையும் கொங்கைகளில் நகக்குறிபட்டு விம்மியிருப்பதனையும் மற்றக் குறிப்பேதங்களையும் அறிந்தவுடன் சூர்ப்பகையாகிய வேலாயுதன் அவளைத்தொட்ட தென்பதையறியாமல் மலையில் தனிமையாகத் தினைப்புனம் காவல் கொண்டிருக்கும்போது வள்ளிமலைச்சாரலி லிருக்கும் தேவதை சோங்கிற்றோ

று பலரும் பற்பலவிதங்களாகப் பேசியிருக்கும்போது தந்தை
...ய வேடர் பெருமானும் சுற்றத்துடன் திரண்டுவந்து வள்ளிநாயகி
...ரின் நிலைமையைப் பார்த்துக் கிலேசித்துப் பின் குற மூதாட்டிக்
கும் முருகனுக்கும் சிறந்த பூசனைகளை நடத்தி வெறியாடல்களைச்
செய்து வந்த சமயத்தில் ஒருவன் பேரில் சுப்பிரமணியர் ஆவேசம்
வந்து வேடராஜ புத்திரியானவள் தினைப்புனத்தில் தனிமையாகக்
காவல்கொண்டிருந்த போது அவளுடைய சுந்தரவடிவத்திற்கு இச்சி
த்து நாமே வலிதில் அவளைத்தொட்டனம், அவளை நமது வெறியாட
லுக்குள் ளாக்குவீர்களானால் அவள் மயக்கத்தினின்றும் நீங்கி
முன்னிலும் பதின் மடங்கு மனவெழுச்சியுடன் இருப்பளென்று
சொல்லிமுடிந்தவுடன் வள்ளி நாயகியார் களைதெளிந்து முன்போலத்
தாய்தந்தையருடன் வார்த்தையாடிச் சந்தோஷமாயிருந்தனள்.

இவைநிற்க, குமாரசுவாமியார், மறுதினம் வழக்கப்படிக்கு
மாறுவேடந்தாங்கி வந்து வள்ளிமலையில் திருத்தேவியரைக் காணுமல்
மனம் கலங்கிப் பிரமைகொண்ட வரைப்போலப் புலம்பி அந்த
வரைமுற்றிலும் திரிந்தலைந்து எதிர்ப்பட்ட பட்சி மிருகங்கள் விருட்
சங்களிடத்தில் என்மனதிற் கினியபெண் கொடிபோனவிடம் சொல்
வீரெனக் கேட்டுக்கொண்டு பின் இளைத்து மனவூக்கமற்று வாட்டிக்
காமக்கவலையுற்றுப் பெருமூச்செறிந்து வள்ளியம்மையார் அடிச்சுவ
ட்டை நாடித்திரிந்து கடைசியில் அர்த்தராத்திரி யானவுடன் மெல்ல
மெல்ல வேடர் சிற்றூரிற் புகுந்து குறவர் பெருமான் குடிசிற்கு அரு
கிற் போய்ப்பதுங்கி நின்று கரத்தைத் தட்டிச் சிலசைகைகள் செய்
தனர். இச்சம்பவம் நேருமென்று முன்னமே அவ்விடத்தில் நித்திரை
கொள்ளாமலிருந்த தோழியானவள் அந்த அரவத்தைத் தெரிந்து
மெல்ல வெளியே வந்து குமாரசுவாமியார் திருவடிகளில் வணங்கித்
தேவரீர் இராக்காலத்தில் இவ்விடம் வருவது தகாது. நீங்கள் இருவ
ரும் கலந்து இன்புறுவதற்குத் தகுந்த விடமும் இல்லை. அப்படி
நேரினும் பின்பு எங்கள் பெண்கொடியானவள் உம்மைப் பிரிந்திருக்
கச்சகியாள். இவ்விதச் சங்கடங்களிருக் கின்றமையால் வள்ளிநாயகி
யாரை உமது இடத்துக்குக் கொண்டுபோய் இஷ்டப்படிக்குக் குல
விஇருப்பது உமக்குத் தகுதியாகுமென்று சுவாமியை அதற்குச் சம்
மதப்படுத்தி அவரை அவ்விடத்தில் நிறுத்திச் செவிலித்தாயானவள்

ரும்பி வள்ளிநாயகியாரிடம் மெதுவாகச் சென்று அவளிடம் அமுதேனும் படிக்கான வாசகங்களைச் சொன்னவுடன் அவள் மனங்குளிர்ந்து துரிதமாய்ப் பாங்கியின் கரத்தைப் பற்றிக்கொண்டு தாய் தந்தையரும் மற்றவர்களும் மெய்மறந்து தூங்குவதைக் கண்டு எவருக்கும் தெரியாமல் நடையைச் சேர்ந்தவுடன் தோழியானவள் தாழ்ப்பாள் சத்தம் தெரியாமல் விலக்கிக்கதவைத் திறந்து வெளியில் அவளைக் கொண்டுவந்து சேர்த்தனள். இறைவியானவள் அங்கு நின்ற எமதிறைவனைக் கண்குளிரக்கண்டு சேவித்து, நாயினேன் பொருட்டுத் திருவடிகள் வருந்தக் கேவலமாயிருக்கப்பட்ட இக்குறவர் குறிச்சியை நோக்கி யாதொரு துணையுமின்றி இந்த நடுராத்திரி வேளையில் தேவரீர் எழுந்தருளுவதோ! சுவாமிக்குத் துன்பமாய் அடியாள் செய்ய நேர்ந்த இக்குற்றத்தினை க்ஷமிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனள். அது சமயத்தில் தோழியானவள், இங்கே நீங்கள் நேரப்படவிருக்கலாகாது, மோசம் வரும், தேவரீர் சீக்கிரமாக இந்தப்பெண் கோடியைத் தமது பதிக்குக் கொண்டுபோய்ப் பாதுகாத்திரட்சிப்பது தமது பாரமாகும், இவளை அருமையாக வளர்த்தனம், இக்காலத்தில் அவள் உமது அடைக்கலம் தான் என்று தலைவியின் கரங்களைப்பற்றிச் சரவணபவன் மலர்க்கரத்தில் வைத்துத் தொழுது நின்றனள். கந்தசுவாமியார் மனமகிழ்ந்து தோழியை நோக்கி, ஓ! பெண்ணே! நீபரிவாய்ச்செய்த இந்த உபகாரத்தை நாம் மறக்கமாட்டோம் எனத்திருவாய் மலர்ந்தனர். தோழி, பின் வள்ளிநாயகியாரைச் சேவித்துத் தன்னிருப்பிடஞ் சென்றனள். அப்பாற் குமாரதேவரானவர் தமது திருத்தேவியுடன் ஓர் சோலையுட் பிரவேசித்து அவள் இன்பநலங்களை அனுபவித்திருந்தனர்.

இவை நிற்க, அதிகாலையிற் குறிச்சியில் வள்ளிநாயகியாரைக் காணாமல் தாயானவள் பதைபதைத்துத் தன் நாயகனிடம் சொன்ன மாத்திரத்தில் அவன் கோபங்கொண்டு என்பெண்ணை மாயமாய்க்கவர்ந்து போனகள்வனைச் சும்மாவிடேனென்று தன் சேரியிலிருக்கின்ற வீரரனைவரையும் திரட்டிக் கொண்டு ஏகமுகமாய் ஆயுதபாணிகளாகத் தேடிவரும் போது அதனைச் சோலையினிடத்திலுள்ள வள்ளிநாயகியார் தெரிந்து நடுநடுங்கிச் சுவாமியை வேண்டிக் கொண்டனள். வாரணத்துவஜர் தம் நாயகியாருக்குத் தயிரியங் கூறி நீ நடக்க விரு

...கும் வேடிக்கையைப் பார்த்திருக்கக் கடவாயெனக் கட்டளையிட்டனர். அத்தருணத்தில் வேடர்கள் ஆர்ப்பாடங்களுடன் கந்தசுவாமியாரிருக்கும் சோலையிற் பிரவேசித்து உற்றுப்பார்த்துக் கள்வன் அகப்பட்டான்! வாருங்கோள்! வாருங்கோள்! என்று கூவ, அதைக்கேட்ட மறவரனைவோரும் ஏகமாய் வந்து கூடி இடிமுழக்கம் போல் அதட்டி எமது பாலசுப்பிரமணிய தேவர்பேரில் இரக்கமில்லாமற் கொடிய பலஆயுதங்களை அளவுக்கு மிஞ்சியபெருக்குடன் சொரிந்தார்கள். அவைகள் குமாரசுவாமி யாரின் திருமேனியில் ஒன்றுஞ் செய்யாமற் பக்தர் அருச்சனைசெய்யும் மலர்களைப் போலக் கீழே விழுந்தன. வள்ளிநாயகியார், சுவாமியை வேண்டி அவர்களனைவோரையும் உடனே சம்ஹரித்துவிடப் பிரார்த்தித்தனள். ஞானசுந்தர வேலரானவர் தமது வெற்றிக்கொடியை நினைந்தனர். அக்காலத்திற் சிவந்தகொண்டையுடைய சேவலானது கந்தசுவாமியாரின் திருக்குறிப்பின் படிக்கு விசாலமாய்த் தழைத்திருக்கும் சிறகுகளை விரித்தசைத்து வானவழிக் கொண்டு பறந்து வந்து சிவகுமாரன் சந்நிதானத்தில் நின்று கழுத்தை நீட்டிப் பேரொலி யெழ ஒருவிசை கூவிற்று. அந்தமுழக்கத்துக்கு ஆற்றமாட்டாமற் சத்துருக்கள் ஒருவர்மே லொருவர் விழுந்து மாண்டார்கள். தமது தகப்பனார் முதலிய சுற்றத்தார் மாண்டு கிடப்பதனை வள்ளிநாயகியார் கண்டவுடன் மனஞ்சகியாமற் பதைபதைத்துக் கண்ணீர் விட்டழுது சோருகின்றபோது தீனரட்சகராகிய சுவாமியார் தமக்கு யாதுந்தெரியாதவர் போலத்தம் திருத்தேவியைச் சோதிக்க வெண்ணி யிருந்தனர். அதுசமயத்தில் நாரதரானவர் நடந்த சம்பவங்களைத் தெரிந்து வந்து குமரபரனைச் சேவித்து ஏ! கருணாமூர்த்தி! மூடராக விருக்கும் வேடருக்குத் தேவரீருடைய மகிமைகள் தெரியுமாயின் இப்பெண் கொடியைத் தேவரீருக்குத் தத்தஞ் செய்து அதிக மரியாதையுடன் பூசித்தனுப்புவதற்குத் தடையுண்டோ! கள்ளவேடமாய் வந்து அருமையாய் வளர்த்துவந்த பெண்ணமுதைத் திருடிக்கொண்டு போனால் அவர்கள் சும்மாவிட்டு விடுவார்களோ! காங்கேயனே! திருத்தேவியாரின் மனவருத்தந் தீரக்கிருபை செய்யவேண்டு மெனப் பிரார்த்திக்கும் மகரிஷியைப் பன்னிருகண்ணன் கிருபையாகப் பார்த்துப் பின் தமது சுந்தரநாயகியாரை அழைத்து நீயேமாண்டவர்க ளனைவரையும் எழுப்பக் கடவாயென்றனர். அம்மையார் அப்படியே அவர்கள் புறமாகத்திரும்பி நின்று நீங்கள

னைவோரும் கமலக்கண்ணன் மருகன் கட்டளைப்படிக்கு முன்போல்
எழுந்து என் மனக்கவலையைத் தீர்க்கக்கடவீர் என்றனள். உடனே
யாவரும் உணர்ச்சி பெற்றெழுந்தனர். சிவகுமாரன் அக்காலத்தில்
தாம் கொண்டிருந்த கோலத்தை மறைத்துக் கிருபாசமுத்திரம் பெரு
கும் தமது சுயசொரூபத்துடன் விளங்கினர். அந்த அற்புதக்காட்சி
யை வேடுவரனைவரும் தெரிசித்து ஓ! எங்கள் குலதெய்வமே! இழிகுல
த்தராகிய அடியோங்களை வம்சபாரம் பரியமாக அடிமைகொண்டு
காப்பாற்றும் ஆதிதேவனா யிருக்கும் தேவரீரே எங்கள் பெண்கொடி
யைச் கோரத்துவமாய்க் கவர்ந்து கொண்டு போய் இந்தக் குலவரம்
பை அழித்துத் தீராதபழிப் புரையைப் பிரஸித்தமாக ஸ்தாபித்தீர்.
இப்போது அந்தப்பழிச் சொல்லுக்கு ஏதுவில்லாமல் தேவரீர் எங்கள்
ஊரைச்சேர்ந்து முறைப்படி. யாவரும் அறிய எங்கள் குலக்கொடி
யைத் திருமணவாயிலாக ஏற்றுப்போகக் கிருபை செய்யவேண்டு
மென்று பிரார்த்திக்கச் சரவணோற்பவன் மகிழ்ந்து அவ்வாறே இசை
ந்து வள்ளிநாயகியா ருடனும் நாரதருடனும் அவர்களுடைய ஊருக்
கு விஜயஞ்செய்வதாயினர். வேடராஜன் அடங்கா மகிழ்ச்சியுடன் தன
து பெண்ணைச் சகலசம்பிர மங்களுடன் குமரசுந்தரருக்குத் தாரா தத்
தஞ்செய்து கொடுத்தனன். பின் நாரதர், சிவகுமாரன் கட்டளைப்படி
க்கு ஓமக்கனலை வளர்த்திச் சகலசடங்குகளையும் முடித்து வைத்தனர்
அந்தச்சமயத்தில் திரிமூர்த்திகளும் தேவர்களும் ரிஷிகளும் மற்றனை
வோர்களும் வந்து சூழ்ந்தனர். சிவபிரானும் தமது தேவியுடன் எழுந்
தருளித் தமக்கினிய தம்பதிகளை ஆசீர்வதித்துத் தமதிருப்பிடஞ்
சென்றனர். சிவகுமாரன் மற்றவர்களை ஆசீர்வதித்து அவரவர்கள்
தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லத் திருவுளம் பற்றினர்.
பக்கத்தில் ஆனந்தப் பெருக்குடன் நிற்கும் வேடராஜனை
எமது சுந்தரசண்முகர் கிருபையாகப் பார்த்து இந்தப்பெண்ணரசி
யுடன் நாம் திருத்தணிகை வரையிற் சேர்ந்திருப்போம், நீ சகலசம்ப
த்துக்களையும் பெற்று வாழ்ந்திருக்கக் கடவாயென்று ஆசீர்வதித்து
அவனையும் அவன் இனத்தவரையும் நிறுத்தித்தமது திருத்தேவியா
ருடன் திருத்தணிகை வரையைச் சேர்ந்து தெய்வதச்சனாற் சோடித்
திருக்கின்ற சபாமண்டபத்தில் உலகங்கள் பிழைத்தற் பொருட்டு
க்கிருபாநோக்கஞ் செய்து வீற்றிருந்தனர்.

அக்காலத்தில் வள்ளிநாயகியார் தம் காதலனைச் சேவித்துச்சுவாமி! இந்த மகத்துவம் பொருந்திய மலையினது வரலாற்றை அடியாளுக்குத் திருவுளம்பற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கக் குமாரதேவர் ஓ! பெண்ணே! இந்தவரை பரமசிவ கடாக்ஷத்தினால் உலகங்களுண்டானபோது நிருமிக்கப்பட்டது. நாம் சூரபதுமனாதி அவுணப்பாதகருடன் யுத்தஞ்செய்ததால் எமக்கு நேர்ந்த சோபங்களை இவ்விடத்தில் வந்தமர்ந்து தீர்த்துக் கொண்டோம். அக்காரணத்தினால் இம்மலைக்குச் செருத்தணி யென்றும் ஓர் பெயர் உண்டு. தேவேந்திரன் இங்குண்டாயிருக்கும் சரவணப் பொய்கையில் நீராடி நம்மை அர்ச்சித்து இஷ்ட சித்தியைப்பெற்றுப் போயினன். பிரளயகாலத்திலும் தெய்வீகம் பொருந்திய இந்தவரையும் தீர்த்தமும் குலைவுதலடைவதன்று. இந்தமலையைத் தூரத்திலிருந்து தெரிசிப்போருக்கும் பாவங்கள் விலகி யோட்டமெடுக்கும். இந்தத்தலத்தில் நமக்கு அதிகப்பிரிய முண்டு. இவ்விடத்தில் நம்மை ஒருதினமாவது யாதாமொருவர் வந்து வழிபாடுக ளியற்றுவராயின் அவர்களுக்கு நாம் இகபர சுகங்களைக்கொடுத் தருளுவோம் எனக் குமாரதேவர் போதித்தவைகளை வள்ளிநாயகியார் கேட்டுச் சுவாமி! அடியாளும் பாக்கியவதியானேன் எனப்பணிந்து மகிழ்ந்திருந்தனள்.

பின் வேலாயுதக்கடவுளும் திருத்தேவியாரும் அந்தமலையினிடத்திற் சதாசிவப் பிரமலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசனைவழிபாடு களியற்றிவரும் காலத்தில் ஒருநாள் தெய்வ விமானத்தைத தருவித்து வள்ளி நாயகியாருடன் சிவசுப்பிரமணிய தேவர் அதில் எழுந்தருளித் திருக்கயிலாயத்திற்கு ஒருபுறத்தி லிருக்கின்ற கந்தமாதனத்தைச் சேர்ந்து விமானத்தை விட்டிறங்கித் தேவராஜ புத்திரியாகிய தெய்வயானையம்மை யெழுந்தருளி யிருக்கும் அந்தப்புரத்தில் வள்ளிமணாளனாக வருவதைக்கண்ட இராஜபுத்திரி அதிகஸந்தோஷமாக எதிர் வந்து கணவன் திருவடிகளிற் பணிந்தனள். கந்தசுவாமியும் அவளைத் தழுவித் தளர்ச்சிகளைப் போக்கினர். அந்தருணத்தில் வள்ளிநாயகியாரும் தம்முன்னவள் திருவடிகளிற் பணிந்தனள். இராஜபுத்திரி அவளைப் பரிவாயெடுத்து ஆலிங்கனஞ் செய்து வாழ்த்தினள். எம்மையாளுங் கடவுளானவர் உபய நாய்ச்சியாரையும் அணைத்து அந்தப்புரத்திற்குக் கொண்டு போய்ச் சிங்காசனத்திற் களித்திருந்து அவர்களு

டன் வார்த்தையாடிக் கொண்டிருக்கும் போது சுவாமியின் இடப்புறத்தில் அமர்ந்திருக்குந் தெய்வநாயகி யானவர் நாயகன் திருமுகத்தை நோக்கி, எமதிறைவனே! தேவரீருடைய வலப்புறத்தில் இருக்கும் மங்கையின் வரலாற்றைத் திருவுளம்பற்ற வேண்டு மெனப் பிரார்த்திக்கக் குமாரதேவர் அத்தேவியாரின் விருத்தாந்தங்களைச் சொல்லக்கேட்டு மனமகிழ்ந்து, நாயகனே! பூர்வத்தில் ஸ்ரீ விஷ்ணுபகவானிடத்தில் அவதரித்த இவளும் நானும் நெடு நாளாய்ப்பிரிந்ததை இக்காலத்திற் கிருபையுற்றுப் பழயபடிக்குக் கூட்டிவைத்த தேவரீர் கடாக்ஷத்திற்கு அடியோங்களாற் செய்யத்தகும் கைம்மாறுண்டோ வெனக்கொண்டாடி வள்ளிநாயகியாரை அதிகப் பிரியமாய்ப் பாராட்டி இருந்தனள். இவ்விதம் தேவராஜ புத்திரியும் வேடப்பாவையும் உபயபாரி சங்களிலும் பொருந்தி யிருக்கும் சந்நிதிமகிமையினல் உலகவாசிகள் அனைவரும் இம்மை மறுமைப் பேரானந்த சுகங்களைப் பெற்றிருந்தார்கள். அத்தருணத்திற் சேவற் கொடி அசையும் திருத்தேரும் பசிய தோகையை வாய்ந்தமயில் வாகனமும் பூர்வத்தில் நாரதர் யாகத்திற் பிறந்த தகரும் வெற்றிவேலாதி யாகிய படைகளும் திருவாயில் முதலிய தலங்களில் அமர்ந்து சண்முகநாதருடைய கட்டளையின் படிக்குப் பணிவிடைகளைச் செய்திருந்தன.

சிவசுப்பிரமணிய தேவர் அழகிய புயாசலங்கள் வாழ்க, துலங்குகின்ற சண்முகார விந்தங்கள் வாழ்க, பொற்சிலம்பு கொஞ்சும் திருவடிகள் வாழ்க, கிரவுஞ்சனையும் தாருகனையும் பிளந்து கொன்ற வெற்றிவேலாயுதம் வாழ்க, மற்றப் படைகளும் வாழ்க, மஞ்ஞை வாகனம் வாழ்க, சேவற் கொடி வாழ்க, நவவீரர் வாழ்க, இலட்சத்தவர் வாழ்க, தெய்வ நாயகியார் வாழ்க, வள்ளியம்மையார் வாழ்க, சிவகுமாரன் அடியவர் அனைவரும் வாழ்க,

சரவணபவன் சரித்திரங்களை அடியேன் ஆசைப் பெருக்கினுலும் கூடிய வரையிற் சுருக்கிச் சொன்னதாகும். இதில் வழுவிருக்குமாயினும் புலவோர் அவற்றில் விளங்கும் கடவுளது மேம்பாட்டைக் கருதிப் பாலிற் கலந்த ஜலமும் பயன் பெறுவதைப் போல அங்கீகரித்துக் கொள்வர்.

இந்த புராண வரலாற்றை ஆராய்ந்து ஆனந்தப் பராவசராய் களித்த குண சம்பன்னரும், அதன் பயன்களை வழுவின்றித் தெரிந்த மகத்துக்களும், அதைக்கொண்டு முக்திபெற நினைந்த ஞானவான்களும் பூமியின்கண் இலக்குமியை யொத்த அழகும் அருந்ததியை யொத்த கற்பும் மண்மகளைப் போன்ற பொறுமையும் மற்ற மேம்பாடுகளனைத்தும் பெற்றிருக்கின்ற கன்னிகையை மணந்து இன்புற்று நல்லபுத்திரரைப் பெற்று அஷ்ட அயிஸ்வரியங்களையும் அனுபவித்திருந்த பின்பு அந்தியகாலத்திற் சிவத்தில் எந்நாளுங் குடியாய் வாழ்ந்திருப்பார்கள்.

6-வது தட்சகாண்டம் முற்றிற்று.

உ

வெற்றிவேலுற்ற துணை.

7-வது உபதேச காண்டம்.

விநாயகர் துதி.

சூழவிவெண் பிறைமிலைச்சி யோற்குணித்த மாதவத்தி
னிழைதடம் புனலருவி தாழிமைய மீன்றெடுத்த
மழை மதர்த்தகண் மரகதப்ப சுங்கொடி பயந்த
தழைமடற் செவித்தந்தி பொற்சரணமே சரணம்.

"சூராதிக ளொடுக்கம்"

சூரபதுமன், சிங்கமுகாசுரன், தாருகாசுரன் முதலானவர்கள் சுப்பிரமணியக் கடவுளால் ஏவப்பட்ட வெற்றிவேலாயுதத்தால் மடிந்த பின்பு அவர்கள் உயிரை அந்த வேற்படையானது ஒடுக்கிக்கொண்ட திவ்ய சரித்திரங்களையும் சொல்லுவாம். முன்னொரு காலத்திற் சிவசுப்பிரமணிய தேவர் கந்தமாதனத்தி னின்றும் மயில்வாகன ரூடராய்ப் புறப்பட்டு ஸ்ரீ கயிலையங்கிரியைச் சேர்ந்து வாகனத்தி னின்றும் இறங்கித் தமது மாதாபிதாக்களிடம் சென்ற பொழுது கோழிக்கொடியும் மயில்வாகனமும் கயிலையங்கிரியின் சாரலில் இருக்கக் குமரக்கடவுளானவர் சிவபிரான் ஆனந்த நிருத்தத்தைக் கண்டு பரவசமடைந்திருந்தனர். ஸ்ரீமகா விஷ்ணுவும் பிரமதேவரும் தங்கள் தங்கள் வாக

னமாகிய கருடன் பேரிலும் அன்னத்தின் பேரிலும் பரமசிவத்தி நடநத்தைக் கண்டுகளிக்க வந்துற்றிருந்தனர். அவர்களின் வாகனங்களும் கயிலையங்கிரிச் சாரலில் தங்கியிருந்தன. அப்போது சூரன், பதுமன், சிங்கமுகன், தாருகன் என்னும் நான்கு பூதகணத் தலைவர்களும் மயிலையும் சேவலையும் பார்த்து உங்களிருவரிலும் மிகுந்த மேன்மைக்கும் பலத்திற்கும் தாங்களே உரியவர்களென்று கருடராஜனும் அன்னமும் நினைத்து உங்களைக் கொஞ்சமும் மதியாது அவமதித்திருக்கின்றன. அதனை நீங்கள் அறியவில்லையோ! இனி அந்தப்பட்சிகள் உங்களுடன் சண்டைசெய்ய வருமானால் நாங்கள் நால்வரும் உங்களுக்குத் துணையாக வருவோம் என்று சொல்ல, மயிலும் சேவலும் பெருங்கோபத்துடன் நந்தி கணத்தலைவர்களுடன் சேர்ந்து போர் செய்ய வருவதனைக்கருடனும் அன்னமும் பார்த்து அவைகளும் சினங் கொண்டு எதிர்த்துப் பெரும்போர் விளைப்பதாயின. அக்காலையிற் கருடன் மயிலினிடத்திற் போராட முடியாமற் சண்டையையிழந்து தன்சிறையை உதறிக்கொண்டு ஆகாயத்திற் பறந்துவிட, அன்னப்பட்சியும் சேவலுக்கு ஆற்றுமல் அந்தக்கருடனுக்குப் பின்னே பிறந்தோடினது. அதனைக்கண்ட கணத்தலைவர் கதாயுதமெடுத்து அவைகளைத் துரத்திக்கொண்டு செல்ல மயிலும் சேவலும் அந்தப்பட்சிகள் போனவழியைத் தொடர்ந்தன. கருடன் வைகுந்தத்திலும் அன்னம் பிரமலோகத்திலும் போய்ப் பதுங்கிக்கொண்டன. மயிலானது கருடனை விடாமல் அதன் அடியைப் பற்றித்தொடர்ந்து அதனை எலும்புகள் உடையும்படிக்கு நன்றுய்ப்புடைத்தது மல்லாமல் வைகுந்த நாட்டையும் நிர்மூலஞ் செய்து விட்டுப் பின்பிரமலோகத்தையும் நாசப்படுத்தி அவ்விடத்திற் பதுங்கியிருந்த அன்னத்தையுங் கொன்று விட்டது. கோழி அவ்விடங்களிலுள்ள உயிர்களை யெலாம் கொறித்து விட்டது. நான்கு பூதகணத் தலைவர்களுடைய கொடிய போரையும் தேவர்கள் சகிக்கமாட்டாத வர்களாய் மனங்கலங்கிச் சோர்ந்து சோர்ந்து தங்களுக்கு நேரிட்ட இத்துன்பங்களை யாரிடம் சொல்லிக் கொள்வோ மென்றிருந்தார்கள். மயிலும் சேவலும் நான்கு பூதகணத் தலைவருடன் யுத்தத்தை விட்டுத் திரும்பி முன்போல் மலைச்சாரலை யுற்றிருந்தன.

உபதேசகாண்டம்.

அத்தச்சமயத்திற் பரமசிவனுடைய திருநடனத்தைப் போற்றி
த்திரும்பி வருகின்ற விஷ்ணுவைத் தேவர்கள் கயிலையங்கிரியின் கோ
புரவாசலிற் கண்டு வணங்கித் தங்களுக்கு நேரிட்ட துன்பங்களை யெ
ந்து சொல்ல, விஷ்ணுவானவர் பிரமதேவருடன் குமரக்கடவுள் எழு
ந்தருளி யிருக்கும் இடத்தைச் சேர்ந்து அப்பெருமானைப் பலவிதமா
கத் தோத்திரம் செய்து, மயிலும் கோழியும் நான்கு கணத்தலைவர்க
ளும் செய்தகாரியங்களை விண்ணப்பஞ் செய்தார்கள். ஸ்வாமி நாதர்
அதனைக்கேட்டருளி அந்தப் பூதகணத்தலைவரை வருவித்து நீங்கள்
பிரமனுலகையும் விஷ்ணுவினுலகையும் அழித்தீர்கள், அல்லாமலும்
தேவலோகத்தையும் நாசஞ் செய்தீர்கள், ஆகையால் நீங்கள் இனிப்
பூவுலகத்திற் கொடிய பாவமுள்ள அரக்கர் குலத்திற் பிறந்து இந்தத்
தேவர்களுக்குப் பலவிதத் துன்பங்களைச் செய்து பின் அக்காரணத்
தினால் முடிவில் நமது வெற்றி வேலினா லிறந்து கதியடையக் கடவீர்
களென்று கொடிய சாப மிட்டனர். அதனைப் பெற்ற நான்கு பூதகண
த்தலைவரும் குமரகுரு பரனைச் சாஷ்டாங்கமாகச் சேவித்தெழுந்து
எம்பெருமானே! நாங்கள் கொடிய அசுரகுலத்திற் பிறந்திருந்தாலும்
தேவரீரிடத்தில் நீங்காத அன்பு பொருந்திய மனத்தை எங்களுக்
கனுக்கிரஹஞ் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்ட
னர். மேலும் வேலாயுதத்தினா லிறக்கும்போது சூரன் மயிலுருவங்
கொண்டு சுவாமியின் திருவடியைத் தாங்கவும், பதுமன் சேவற்கொடி
யாய் அலரிடத்தமரவும் வரம்பெற்றுக் கொண்டு இருவரும் மாயை
யின் வயிற்றில் ஒரு உருவமாகச் சூரபதுமனென்னும் பெயரோடு பிற
ந்தார்கள். மற்ற இருவரில் சிங்கமுகனென் றொருவனும் தாருகனெ
ன்றொருவனுமாகச் சூரபதுமனுக்குப் பின்பு அம்மாயையின் வயிற்றி
ற்பிறந்தனர். நிர்மூலமாய் அழிந்தொழிந்த கருடனும் அன்னமும் மற்
ற உலகங்களும் எமது வெற்றிவேற்கடவுளின் திருவாக்கின் விசேஷ
த்தினாற் பழயபடிக்கே நிலைபெற்றிருப்ப தாயின. இது பூர்வத்திலே
யே நடந்த தென் றுணர்க.

இவை நிற்க, முன்நாட் சுப்பிரமணியக் கடவுளுடன் போர் செ
ய்த யுத்தகளத்தில் மாயையானவள் தன் பௌத்திரனாகிய பானுகோ
பனுக்கு ஒரு ரகசியஞ்சொல்லி மறைந்து போய்த் தன்மகளாகிய அச
முகியினிடத்திற் சேர்ந்து மகளே! இனி உன்சகோதரர்களுக்கு

வெற்றிகிடையாது. அவர்கள் சுப்பிரமணியக் கடவுளுடைய வெ வேலினால் இறந்துபோகும்வரை நீ இங்கே இருந்து அப்பால் நா போவதாயிருக்கும் ஸ்ரீசயிலத்தைக் குறித்து வந்து சேரென்று சொல் லி நீங்கிப்போய் விட்டாள். சூரன் முதலானவர்கள் மாண்டுபோன பின்பு அசுரேந்திரனும் இரணியனும் பாதாளத்திற் போய்ச்சேர்ந்தா ர்கள். அசமுகியானவள் பிரலாபித்துக் கொண்டு ஸ்ரீசயிலத்தை யடை ந்து மாயையினால் தான் கொண்டிருந்த மனத்துயரம் சற்று நீங்கி ஓ! என் அருமையான தாயே! எனது தமயனாகிய சூரபதுமன் சிவகுமா ரனுக்குச் செயம் பொருந்திய மயிலும் சேவலும் ஆயினனென்றும் தாருகாசுரனும் சிங்கமுகாசுரனும் கயிலாயத்திற் சிவகணங்களாக வாழ்கின்றார்க ளென்றும் உன்னால் தெரிந்து கொள்ளலானேன். ஆனா ல் அவாகள் தீமைகளையே செய்து கொண்டிருப்பவர்களா யிருந்தும் இப்பெரிய பதங்களை யடைந்ததற்கு என்ன காரணமென்று கேட்க மாயையானவள் சொல்லுவாள்.

நெடுங்காலத்துக்கு முன் சமுத்திரத்தின் நடுவிலுள்ள நவதீவு களில் சாகத்தீவு என்பதொன்றில் பிரபாகர னென்னுமோர் அரசன் மகாபதிவிரதையாகிய சுகுமாரி யென்னும் மனைவியுடன் கூடி நீதியா ய் அரசாங்கம் செய்து வரும் நாளையில் அவனுக்குச் சூரனென்றும், பதுமனென்றும், சிங்க னென்றும், தாருக னென்றும், நான்கு புத்திரர் பிறந்தார்கள். பிரபாகர னென்பவன் முன் பிறந்தவனாகிய சூரனுக்குத்தன் அரசாட்சியைக் கொடுத்துத் தவஞ்செய்யச் சென்ற னன். சூரன் தன் துணைவர்களுடன் நீதியாய்ச் செங்கோல் செலு த்தி வருங்காலத்தில் அகஸ்திய முனிவர் அவர்களிடம் எழுந்தருளிச் சிவசுப்பிரமணியக் கடவுளினது பெருமைகளையும் அவரிடத்திற் பொ ருந்தி விளங்கும் மயில் சேவல் இவைகளினுடைய மகத்துவங்களை யும் விளங்கச் சொல்லித் தமதிருப்பிடஞ் சென்றனர். பிற்பாடு சூரன் பதுமன் என்னும் இருவருக்கும் நம்பெருமானுக்கு மயில்வாகனமாக வும் சேவற் கொடியாகவும் ஆகவேண்டு மென்று எண்ணம் உண்டா னது. இவை நிற்க, திரணவிந்து வென்னும் முனிவரானவர் சிங்கமு கன் தாருகன் என்னும் இருவருக்கும் முறையே காளியைப் பற்றி யும் அவள் வாகனமாகிய சிங்கத்தின் மகத்துவத்தையும் பின் அரிஹ ரபுத்திரரைப் பற்றியும் அவர் வாகனமாகிய ஆனையின் மகத்துவத்

யும் எடுத்துப் போதித்துச் சென்றனர். பின்பு நான்கு இராஜபுத் ...ரும் தங்கள் புத்திரர்களிடத்தில் பூமிபாரத்தைக் கொடுத்து விட்டு ஸ்ரீசயிலவனஞ் சென்று பஞ்சாக்கினி மத்தியில் மயில், சேவல், சிங்கம், ஆனை இவைகளைத் தனித்தனி ஒவ்வொருவரும் சிந்தித்து அவைகளின் பதவியைப் பெற்றுக் கொள்ள அரியதவஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

இவ்விதம் தவஞ்செய்து கொண்டிருக்கும் போது கயிலாசத்திற் பரமசிவத்தின் திருநடனத்தைத் தெரிசிக்கும் படிக்குத் தேவர்கள் தங்கள் வாகானங்களைக் கயிலையங்கிரிச் சாரலில் விட்டுச் சென்றிருந்தார்கள். அப்போது அச்சாரலி லிருந்த கருடனும் அன்னமும் மயிலையும் சேவலையும் நோக்கிச் சாகத்தீவில் உங்கள் இவர் பதங்களையும் மகாகாளி வாகனமாகிய சிங்கத்தினுடைய பதத்தையும், சாத்தன் வாகனமாகிய யானையினுடைய பதத்தையும் பெறும்படிக்கு நான்கு அரசர்கள் தவஞ்செய்கின்றார் களென்றவுடன் மயில் முதலாகிய வாகனங்கள் ஒன்றாகச்சேர்ந்து பெருங் கோபங்கொண்டு புறப்பட்டு ஒரு நாழிகைக்குள்ளாக அவ்வரசர்கள் தவத்தையழித்து நீங்கள் பெரிய பூதங்களாய்க் கணங்களுடன் இருக்கக்கடவீர்களெனச் சபித்துத் திரும்புங்காலையில் நால்வரும் மயில் முதலானவைகளை வணங்கி வேண்டிக் கொள்ள அவைகள் மனமிரங்கி நீங்கள் கருதியதவப்பயனைப் பிற்பாடு அடைவீர்க ளெனச் சொல்லிமீண்டன. உடனே அந்த அரசர்கள் கயிலையங்கிரியில் கணங்களாய்ச் சேர்ந்திருந்து பின்பு கருடனும் அன்னமும் நம்முடைய தவத்தை யிழக்கும்படி செய்தன வென்னும் பகையைத் தங்கள் சிந்தையில் வைத்துக்கொண்டு மிகுந்த கோபாவேசமாய்ச் சமயம் வந்தபோது மயிலையும் சேவலையும் கருடனுடனும் அன்னத்துடனும் போர்செய்ய மூட்டிவிட்டார்கள். அந்த நான்கு கணத்தவர்களும் பின்பு ஊழ்வினைத் தொடர்பினால் சுப்பிரமணியக் கடவுளின் கட்டளையின் படிக்கு உலகத்தில் அசுரர் குலத்திற் பிறந்தார்களென்று மாயைதன் மகளாகிய அசமுகிக்குச் சொல்ல அதனைக்கேட்டு அவள் தாயே! அவர்கள் அசுரராய்ப் பிறந்த காலத்தில் தேவர்களுக்குத் தீங்குசெய்து வருத்திய காரணம் யாதோவென்று கேட்க மாயை சொல்லுவதாயினள்.

பூர்வத்தில் ஸ்ரீகயிலாயத்திலி ருக்கும் பூதகணங்களுடன் இந்நால்வரும் கணங்களா யிருந்தபோது தேவர்களுக்குப் பூலோகத்திலிருக்

கும் அசுரேந்திரனால் தோல்விநேரிட இந்த நான்கு கணத்தலைவ கோபித்து எழுந்து அசுரசேனையைக் கொன்று தேவர்களை இந்த லோகத்தில் குடியேற்றினார்கள். அசுரேந்திரன் கயிலாசபதியினிடம் இந்நாலவர்களின் செய்கையை முறையிட்டுக் கொள்ளப் பரமசிவன் அந்நால்வரையும் வருவித்து நம்முடைய ஆக்கினையை மதிக்காமல் நீங்கி அசுரர்களைக் கொன்றீர்க ளாகையால் நீங்கள் அசுரர்குலத்திற் பிறந்து தேவர்களுக்குத் துன்பஞ்செய்யக் கடவீர்களெனச் சாபமிட்டனர். அவ்வாறு அவர்கள் அந்நாள்முதல் செய்துவந்த துன்பம் இப்போது நீங்கிவிட்டது.

இதற்குமுன் சாகத்தீவில் தவஞ்செய்திருந்த அரசர்களைக்கொலை வுதல் செய்ததனைச் சுப்பிரமணியக் கடவுள் பார்த்துத் தமது மயிலையும் சேவலையும் கோபித்து இன்று முதல் நீங்கள் நம்மைவிட்டு அகன்று போங்களென விலக்கி விட்டனர். சேவலும் மயிலும் இறைவனைவணங்கி இனி நாங்கள் எந்தக்காலம் தேவரீருடைய திருவடிகளைச் சேருவோமென வேண்டிக்கொள்ளக் குமாரசுவாமியார் கிருபையுற்று நீங்கள் காஞ்சிப்பதியில் நம்மைக்குறித்துத் தவஞ்செய்திருப்பீர்களாயில் நம்முடைய திருவடியைத் தருகின்றோமென அருள்செய்தனர். அவ்வாறே அவைகள் தவஞ்செய்து குமரக்கடவுள் பாதாரவிந்தங்களை அடைந்தபின் சூரனும் பதுமனும் செய்த தவத்தினால் மயிலுஞ் சேவலுமானார்கள். சிங்கமுகனும் தாருகனும் கயிலாயத்திலிருக்கும் திருநந்திதேவரை வணங்கிக் காளிக்குச் சிங்கமாகவும் சாத்தாவுக்கு வெள்ளையானையாகவும் இருக்க நாங்கள் செய்த தவப்பலனைக் கடாக்ஷிக்க வேணுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். நந்திதேவர் ஓ! தவசிகளே! அந்தக்காளிக்கும் சாத்தாவுக்கும் இப்போது இருக்கின்ற வாகனங்களுக்கு மோக்ஷங் கொடுக்குமளவும் நீங்கள் நம்மிடத்திலேயே இருங்களென்று சொல்ல அவர்கள் அப்படியே மகிழ்ந்திருந்தார்கள். இதனைக்கேட்ட அசமுகியானவள், தாயே! அந்தவாகனங்கள் நந்திதேவரால் மோக்ஷமடைந்த வகையைச் சொல்ல வேண்டுமென மாயைசொல்லுகின்றாள்.

முன்னொருகாலத்தில் துர்க்கையும் சாத்தாவும் பரமசிவனைத் தொழுது தங்களுக்கு வாகனங்களை யருள்செய்யவேணுமென்று பிரார்த்தித்துக் கொள்ளச் சிவநாதன் தமதுநந்தி தேவரைக்குறித்து

...ர்சனுக்கு வாகனங்கள் அமைத்துக் கொடுக்கக் கட்டளையிட்ட ...ர். அந்தத்தேவர் கயிலையங்கிரிச் சாரலில் தவஞ்செய்திருந்த ஒரு சிங்கத்தையும் யானையையும் இவர்களுக்கு முறையே வாகனமாகக் கொடுத்த வளவில் அவ்விரண்டு மிருகங்களும் நந்திதேவரைப் பிரார்த்தித்து நாங்கள் தேவரீருடைய திருவடியை அடையத் தவஞ்செய்திருந்தோம். அப்படியிருக்க மத்தியில் இவ்வாறு நேரிட்டகாரணம் யாது என்று கேட்க நந்திதேவர் அவைகளைப் பார்த்து உங்கள் இருவர் காலஞ்சென்ற பின் கதிகொடுக்கின்றோமென்றருளத் துர்க்கைக்கும் சாத்தாவுக்கும் அவைகள் வாகனங்களாகப் பொருந்தியிருந்தன. பிற்பாடு அவைகள் காலஞ்சென்ற பின் நந்திதேவர் அவைகளுக்குப் பதத்தைக் கடாக்ஷித்து அப்போது வாகனமில்லாதிருந்த காளிக்கும் சாத்தாவுக்கும் சிங்கமுகனையும் தாருகனையும் சிங்கமாகவும் வெள்ளை யானையாகவும் முறையே வாகனங்களா யிருக்கும்படிக்கு ஆக்கியாபித்தனுப்பினர்.

(அசமுகியின் வரலாறு)

இவைகளை அசமுகிகேட்டுப் பின்னும் மாயையை நோக்கி என் அன்னையே! இனி என்னுடைய பூர்வநிலையையும் சொல்லவேண்டுமென்ன அவள் சொல்வதாயினள். சப்த சமுத்திரங்களின் மத்தியில் கோமேதகமென்றுந் தீவுஒன்று உண்டு அதிற் பிராமணகுலத்தில் வசிட்டன் என்பவனுக்கும் கற்புடைய சுவேதை என்பவளுக்கும் சித்திரரேகை யென்னும் பெண் பிறந்தாள். அப்பெண்ணானவள் சௌந்தரிய மெல்லாம் திரண்டு ஒரு வடிவங்கொண்ட வளாயிருந்தாள். கோமேதகத் தீவுக்குச் சமீபத்தில் பூச்சக்கிர மென்னும் ஓர் நகரிற் பிராமணகுல சிரேஷ்டனாகிய அரிசன்மன் என்பவனுடைய புத்திரனாகிய புண்டரீக சன்மன் என்பவனுக்கு மேற்கூறிய அதிக அழகுள்ள சித்திரரேகை யென்பவளைக் கல்யாணஞ் செய்துகொடுக்கப் பட்டிருந்தது. புண்டரீக சன்மன் என்னப்பட்டவன் வயிணவ சமயத்தில் தலைமை பெற்றவனாக விருந்து தான் விவாகஞ்செய்து கொண்டவளிடத்தில் உடலும் உயிரும் போலத் தழுவி வாழ்ந்திருந்தான். அந்நாளில் இந்தப் பிராமணனுக்கு வறுமைக்காலம் வர அவ்வறுமையைக் கண்டு இரக்கங்கொண்டு மகாவிஷ்ணு வானவர் அவனுக்குச் சிந்தாம

னியைக் கொடுக்க அதனால் மிகுந்த திரவியத்தைப் பெற்றுத் த னிடத்திற் கல்விகற்றுக் கொண்டிருந்த பலமாணாக்கர் களுக்கு கொடுத்துச் சிறப்பாக விருக்கும் நாளில், இவன் மனைவி கற்புநிலையை இழந்து அவனுடைய மாணாக்கரை விரும்பிப்புணர்ந்து மகிழ்ந்திருந்தாள். இதுவுமன்றி அந்நகரத்திலுள்ள ஆடவர்களையும் விரும்பி அவர்களில் அனேகரைத் தன்வசமாக்கிக் கெடுத்து விட்டனள். ஒரு நாள் அவள் நாயகனாகிய புண்டரீக சன்மனென்னும் வைஷ்ணவனிடம் துருவாசகமுனிவர் எழுந்தருளிவரப் பிராமணன் அவரை உபசரித்து இருக்கச்செய்து தனது பத்தினியாகிய சித்திரரேகையை நோக்கி இம்முனிவருக்குத் திருவமுது சமைக்கவேண்டுமெனக் கட்டளையிட அவளும் அவ்வாறே சமைத்து அமுதத்தை யெடுத்துக்கொண்டு யோக நித்திரை செய்திருக்கின்ற முனிவரிடம் சென்று அவர் பேரிற் காமவிச்சை கொண்டு மேல்விழுந்து அவருடைய தோளைத்தழுவினள். அம்முனிவர் விழிகளைத் திறந்துபார்த்த வளவில் இவள் பயந்தோடிச் சமீபத்திலிருக்கும் செம்மறியாட்டுக் கூட்டத்தில் ஒளிந்துகொள்ள உடனேமுனிவர் அதிகக்கோபங்கொண்டு அதனை அறிந்தவராய்த் தமது சீஷனை நோக்கி நீ அவளைக்கொண்டு போய் உயர்ந்த அந்த ஆலமரத்தின் உச்சியில் ஏற்றி உன் தவப்பெருமை யாவரும் அறியும்படிக்குச் செய்வாயெனக் கட்டளையிட்டனர். சீஷனானவன் அவளைப்பிடித்து உயர்ந்த ஆலமரத்தின் உச்சியில் ஏற்றினான். அவளோ அம்மரத்தின் உச்சியிற் கொம்பை பிடித்துக் கொண்டு இறங்கமுடியாமல் துன்பப்பட்டு அலறிக் கொண்டிருக்கும் போது அந்நகரத்திலிருக்கும் ஸ்திரீ புருஷர்கள் அவளைப் பார்த்து ஆச்சரியங் கொண்டார்கள். அவள் நாயகன் சம்பவித்ததனை அறிந்து முனிவரை வணங்கி மரத்தைவிட்டு எனது பத்தினி யிறங்கக்கடாக்ஷிக்கவேணுமென்று பிரார்த்திக்க, அவர் அப்பிராமணனை நோக்கி இல்லறதருமத்தை யிழந்தவளுடைய புல்லிய வொழுக்கத்திற்குச் சம்மதித்திருக்கும் நீசனே! அவள் தனத்தை யிவ்வுலகத்தில் எல்லாருக்கும் கொடுத்தாள், இப்படிப்பட்டவளை அக்கினி சாட்சியாக உனக்கென்று கொடுத்தார்கள், அப்படியிருக்க அவள் தன்னுடைய இன்பம் பிறருக்குப் பயன்படச் சமைத்திருக் கின்றாளன்றி உன்னை ஒரு பொழுதும் நினைப்பவளல்ல என்று சொல்லப் பிராமணன், தேவரீர் அவள் எப்படிப்பட்ட குற்றஞ்செய்திருந்தாலும் திருவுள்ளத்திற்

...ள்ளாமல் ஆலமரத்தை விட்டு அவள் இறங்கக்கடவ தென்று ஒரு ...ர்த்தை சொல்லவேண்டு மென்று பிரார்த்தித்தனள். துருவாசர் அவனை நோக்கி அவள் பதிவிரதை யாயிருந்தால் நீபோய் அவளை இறங்கச் சொன்னவுடன் இறங்கிவிடுவள் என்றார். அவன் அவ்வாறே போய்ச்சொன்ன காலையில் அவள் நாலடிமட்டும் இறங்கினின்றாள். பிராமணன் திரும்பிவந்து துருவாசரை வேண்டிக் கொண்டான். முனிவர் அப்படியானால் அவளைப் புணர்ந்த ஆடவரெல்லாரும் அந்த மரத்தடியில் வந்து இறங்கென்று சொல்வார்களாயில் இறங்குவாள் என்றனர். உடனே அவளிடத்திற் புணர்ந்தவர்களை யெல்லாம் அவன் அழைத்துக் கொண்டுவர அவர்கள் வந்து பெண்ணே இறங்கென்றார்கள். அப்போது அவள் பாதிமரத்தில் இறங்கி அப்புறம் இறங்க மாட்டாமல் துன்புற்றனள். பிராமணன் மீட்டும் முனிவரிடம் சென்று வேண்டிக்கொள்ள அவர் உன்னுடைய சீஷர்களெல்லாரும் அழைத்தால் இறங்குவள் என்றனர். சீஷர்களும் வந்து அழைத்தார்கள். அவள் அப்போது அந்த ஆலமரத்தின் அடிக்கவட்டில் வந்திருந்தாள். அதைப்பார்த்த அவள் புருஷன் துன்பத்துடன் முனிவரிடம் ஓடி முறையிட்டுக் கொள்ள அவர் ஓ! பிராமணா! உன்மனைவியைப் புணர்ந்தவர்களின் பெயரை யெல்லாம் அவள் சொல்லிச் சொல்லித் தெரிவித்தால் இறங்குவா ளென்றனர். அந்தப்படியே அவள் அந்தந்தச்சோரபுருஷரை யெல்லாம் தனித்தனி பெயரைக்கூறினாள். அப்போது அவள் அந்தக்கிளையை விட்டிறங்கிக் கீழ்க்கவட்டில் வந்திருந்தனள். புருஷன் அருந்தவரிடம் போய்த்திரும்பவும் வேண்டிக்கொள்ள அவர் தமது சீஷர்களுடன் அந்த ஆலமரத்தருகிற் சேர்ந்து புண்டரீக சன்மனை நோக்கி இவள் இதுவரையிற் செய்த பாதகங்களிற் பாதி உன்னைச் சேர்ந்தன. ஆகையால் உன்தவம் அழிந்து பரமேஸ்வரன் திருவடிகளையும் சேரமாட்டாயென்ற போது பிராமணன் ஓ! முனிவரே! நீர் சமயவிரோதத்தை உட்கொண்டு எனக்கு இந்தச்சாபம் கூறினீர் என்று சொல்லத் துருவாசர் கோபங்கொண்டு, அடா! தியானபங்கனே! உன்பேர் யோனிமனத்தனென்று வழங்கக்கடவ தென்று சபித்து அவன் அருகிலிருக்கும் சீஷர்களைநோக்கி நீங்கள் குருவின்பத்தினியை விரும்பினீர்கள் ஆகையால் உங்கள் பத்தினிகளும் வேசையராவார்களென்று சொல்லி மரத்தில் தொத்திக்கொண் டிருப்பவளை

நோக்கிக் குவிந்தமுலையினை யுடைய சித்திரரேகையே! நீசமது பே
யைத் தீண்டினமையாற் கொடிய அசுரகுலத்திற் பிறந்து பலபே
புணரும் நீங்காத காமவிகாரம் பெற்றிருப்பை. ஆட்டின் கூட்டத்
தில் ஒளித்திருந்தனை ஆதலால் உன் முகமாத்திரம் ஆட்டின் முகமா
கும். இனி மரத்தை விட்டு இறங்கிப்போ வென்றனர். அந்தப்பாத
கியானவள் இரங்கி முனிவர் திருவடிகளில் வணங்கி என்னை நிந்தை
செய்தீர் ஆனாலும் தேவரீர் திருவடிகளைப் பரிசிக்கத்திருவருள் செய்
யவில்லை யெனப்பிரார்த்திக்க முனிவர் ஓ! சித்திரரேகையே! ஒருவர்
செய்தபாதகம் எல்லாம் அவர்களே பருத்துச்சொன்னால் தொலைந்து
பொகுமென்னும் உலகப் பழமொழியை நீ அறிவாயே! ஆதலால்
உன்பாவமெல்லாம் நீங்கிவிட்டது. இனி நீ பெண்ணாக அசுரகுலத்
தில் இருக்கும் போது நீ நம்மைப் புணர்ந்து இரண்டு புத்திரர்களை
ப்பெறுவாய், அன்றியும் மகாகாளர் கையினால் மூக்கும் முலை
யும் கையும் இழந்து அவர் தொட்ட மகிமையினால் அன்று வரையில்
நீ செய்தபாவ மெல்லாம்போய் நல்லுணர்ச்சி பெற்று ஸ்ரீ சயிலஞ்
சேர்ந்து தவஞ்செய்து கொண்டிருப்பா யென்று கட்டளையிட்டருளி
னர். அடிமகளே! இப்படிப்பட்டவள் நீதான் ஆகும். அந்த முனிவர்
சாபமும் இப்போது உனக்கு விமோசனமாகி விட்டது. இனித்தவத்
தை விரும்புவாயாக வென்று மாயையானவள் தன்மகளாகிய அசமு
கிக்குச் சொல்லினள்.

(மாயை வரலாறு)

அசமுகி அதனைக்கேட்டு அன்னையே! இனி உன்னுடைய பூர்வ
ஜனனத்தின் விபரங்களையும் சொல்ல வேணுமென்று கேட்க மாயை
யானவள் சொல்லுகிறாள். பூர்வத்திற் காசிபரிஷிக்கு நானொரு பத்தி
னியாகி அவருக்குப் பலகோடி புத்திரரைப் பெற்றேன். அவர்கள்
தேவர்களோடு போர்செய்து இறந்துவிட நான் அவ்வருத்தம் சகிக்க
க்கூடாமல் இந்தமலையின் உச்சியிலேறி விழுந்து உயிர்விட்டேன்.
பின் நான் அசுரேந்திரனுக்குப் புத்திரியாகப் பிறந்து மாயையென்
னும் பெயர் உள்ளவளாய் உங்களை யெல்லாம் பெற்றேன். காசிபர்
என்னுடைய பிரிவாற்றாமல் வருந்தியிருப்பதனைப் பிரமன் நோக்கி
அவருக்குச் சமாதானம் சொல்ல அவர் புலத்திய ரிஷியின் புத்திரியை
விவாகஞ்செய்து கொண்டு விரகாக்கினியை ஒழித்திருந்தனர். இவை
களையெல்லாம் நான் சுக்கிரபகவானால் அறிந்திருக்கிறேன். அல்லா

திரிகாலங்களையும் அறிவேன் என்றனள், அசமுகியானவள் பின் மாயையின் பாதங்களில் வணங்கி நல்லதவமுயற்சியைப் பெற்றவளாய் மாயையுடனிருந்து தவஞ்செய்து ஸ்ரீகயிலாசத்தைச் சேர்ந்திருந்தனள்.

(சிவமுனி முதலாயினோர் வரலாறு)

விஷ்ணுவானவர் வாமனாவதாரங் கொண்டருளிய காலத்தில் அவருக்கு உபேந்திரரென்னும் பெயர் உண்டாயிற்று. அதாவது இந்திரனுக்குத் தம்பியென்பதேயாம். ஒருநாள் அந்த உபேந்திரமூர்த்தியானவர் தமது அவதாரத்துக்கு அதிட்டானப் பொருளாகிய நாராயண மூர்த்தியை வணங்குவதற்கு வைகுந்தம் போயினர். அந்தச்சமயத்திற் கண்ணுவரென்னும் ரிஷியானவர் விஷ்ணுவை ஆசீர்வதிக்க வந்தனர். விஷ்ணுவும், மகாலெட்சுமியும் உபேந்திரரும் அம்முனிவரை அலட்சியஞ் செய்திருந்த சமயத்திற் கண்ணுவர் கோபங்கொண்டு ஓ! பேதைகளே! சிவபெருமானுக்கு நான் வழித்தொண்டனென்று நீங்கள் அறிந்திருந்தும் என்னை அவமதித்தீர்களாகையால் இதோ சபிக்கின்றேனென்று முதலில் விஷ்ணுவைப் பார்த்து, நீ பூமியிற் பலஜென்மங்களெடுத்து உழன்று ஊமரைப்போற் பேதையாய்த் திரியக்கடவாயென்றும், மகாலெட்சுமியை நோக்கி நீயுந்தேககாந்தியொழிந்து பாலைவனத்திற் பெண்மானாகப் போந்து அலையக்கடவாயென்றும், உபேந்திரரைக்குறித்து நீ வேடுவனாகப்பிறந்து மூடனாய்த்திரியக்கடவாயென்றும் சபித்துக்கண்ணுவர் தமதுஆச்சிரமஞ்சேர்ந்தனர். சாபத்தைப்பெற்ற மூவர்களில் விஷ்ணுவானவர் பரமசிவனைக்குறித்துத் தவஞ்செய்தனர். கயிலாசபதி பிரசன்னமானவுடன் மாதவர் தனக்குக் கண்ணுவரிஷி கொடியசாபமிட்டதனைக்கூறி அதனைநிவர்த்தித்துக் கிருபைசெய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். பரமேஸ்வரன் கண்ணுவரிஷியைவருவித்து அவரைக்கொண்டே விஷ்ணுவுக்கு ஒரு ஜென்மமட்டிலும் எடுக்கும்படிக்குக் கிருபைசெய்தனர். உடனே விஷ்ணுவானர் ஓர்காட்டிற் சிவமுனிவர் என்னும் பேர்தாங்கி ஊமராய்ப் பிறந்தனர். உபேந்திரர் வேடுவனாகப்பிறந்தனர், மகாலெட்சுமியும் அவ்வனத்தில் தானேபெண்மானாகப் பிறந்து மருண்டுதிரிந்தனர். அப்பால் உலகமாதாவாகிய வள்ளிநாயகியாரைச் சிவமுனிவராகிய விஷ்ணு

பகவானும் பெண்மாளுகிய மகாலட்சுமியும் பெற்றதினாலும், ம
ளுகியஉபேந்திரன்எடுத்து வளர்த்ததினாலும், அந்த எம்பிராட்டியா
எமது கந்தவேள் மணந்ததினாலும் மேலேசொன்ன மூவர்க்கும் சா
ங்கள் நீங்கித் தங்கள் தங்கள் தெய்வ வடிவங்களையடைந்து இன்புற்
றிருந்தார்கள்.

வாழ்த்து விருத்தம்.

துய்யதா மறைகளாலுந் துதித்திடற் கரியதான
செய்யவே ளடிகள்வாழ்க சேவலு மயிலும்வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்கவன்னுன்
பொய்யில்சீ ரடியார்வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

7-வது உபதேசகாண்டம்

முற்றியது.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் திருவடிகளே சரணம்.